இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN


Registered as a Catholic Weekly (G.P.O.197) Founded 19 Feb.1876


St.Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna, Sri Lanka: Tel: 021-222 2378 Fax : 021 222 9041 -E-mail: editorkavalan@gmail.com ISSN 1391-7633

மலர்: 142 இதழ் : 13 திகதி: 05.08.2018 விலை : 20.00


## டிஜிற்றல் யுகத்தில் கால்பதிக்கிறது புனித வளன் கத்தோலிக்க அச்சகம்

### ஆசிதந்து ஆரம்பித்து வைத்தார் யாழ் ஆயர்





ஊடக பரிணாம வளர்ச்சியில் இன்று அச்சு ஊடகம் டிஜிற்றல் பதிப்பாக யுகத்தில் கால்பதித்துள்ள நிலையில் வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க யாழ் புனித வளன் கத்தோலிக்க அச்சகமும் தனது பதிப்பகப் பணிகளை டிஜிற்றல் மயப்படுத்தியுள்ளது.

பலவர்ண பதிப்புக்களை டிஜிற்றல் முறையில் பதிப்பிக்கக்கூடிய நவீன டிஜிற்றல் இலத்திரனியல் இயந்திரம் தற்போது புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தினரால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இப்புதிய நவீன டிஜிற்றல் இயந்திரத்தை ஆசீர்வதித்து அதன் முதற் பணியை இவ் அச்சகத்தின் முன்னாள் இயக்குநரும், தற்போதைய யாழ் ஆயருமாகிய யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் 02.08.2018 வியாழக்கிழமை ஆரம்பித்து வைத்தார்.

ஆயர் அவர்கள் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தின் வளர்ச்சிக்கு இப்புதிய இயந்திரம் வழிவகுத்துள்ளது எனக் கூறியதுடன், இதனைக் கொள்வனவு செய்ய பெரிதும் உதவிய திரு.ஜோசப் டிலிப் சிறில் குடும்பத்தினருக்கு தனது நன்றிகளையும் தெரிவித்து நின்றார்.

டிஜிற்றல் இயந்திரம் கொள்வனவு செய்யப்படுவதற்கு பெரிதும் காரணமாக இருந்த புனித வளன் கத்தோலிக்க அச் சக இயக்குநர் அருட்பணி S.எயின்சிலி றொஷான் அடிகளாரைப் பாராட்டியதுடன், அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இதேவேளை யாழ் புனித வளன் கத்தோலிக்க அச்சகம் "சூரிய ஒளி" (Solar) மூலம் இயங்கும் மின்னுற்பத்தி இயந்திரத்தையும் கொள்வனவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புனித வளன் கத்தோலிக்க அச்சகத்திற்கு கணனி அன்பளிப்பு

யாழ் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்திற்கு இரு கணனிகளையும் 10 KV வலுவுள்ள UPS ஒன்றையும் ஐக்கிய இராச்சிய தமிழ் கத்தோலிக்க ஒன்றியம் வழங்கி உதவியுள்ளது.

டிஜிற்றல் பதிப்பகத்திற்கு அவசரதேவையாக அமைந்த இவ்வுபகரணங்களை வழங்கி உதவிய ஐக்கிய இராச்சிய தமிழ் கத்தோலிக்க ஒன்றியத்திற்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து மகிழ்கின்றோம்.

## ஆன்மீகப் பணி செய்பவர்களையே மக்கள் இன்று எதிர்பார்த்து நிற்கின்றனர்

### சங்கமம் ஆன்மீக மையத்தின் "ஆரதனா" மண்டபத் திறப்பு விழாவில் யாழ் ஆயர்



யாழ் அமலமரித் தியாகிகள் சபையின் சங்கமம் ஆன்மீக மையத்தின் ஆராதனா மண்டபம் கடந்த மாதம் 30.07.2018 திங்கட்கிழமை யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் உரையாற்றியபோதே யாழ் ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஆயர் தனது உரையில் இன்று எமது சமூகத்தில் பலவிதமான பணிகளை மேற்கொள்ள பலரும் இருக்கின்ற (தொடர்ச்சி 12ம் பக்கம்

## திருமறைக்கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகளாருக்கு கௌரவம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையும், வறுவெளி அரங்க குழுவும் கடந்த மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை இணைந்து நடத்திய நாடக விழாவில் திருமறைக் கலாமன்றத்தின் தாபகரும், இயக்குநரும், யாழ் மறைமாவட்டத்தின் மூத்த குருவுமாகிய அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகள் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களால் அரங்கப்பணிக்காக கௌரவிக்கப்பட்டார்.

பல வருடங்களுக்குப்பின்பு யாழ்பாணப் பல்கலைக்கழகம் நடத்திய மேற்படி நிகழ்வில் மூன்று நாட்களும் பல நாடகங்கள் மேடையேற்றப் பட்டதுடன், கருத்தமர்வுகளும் நடத்தப்பட்டன. நீண்டகாலமாக தமிழ் அரங்கிற்கு அளப்பரிய பணியாற்றிய ஆளுமையினரான அருட்கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகள் உட்பட கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம், கலாநிதி. மக்கன்ரயர் ஆகிய மூவருக்கும் கௌரவிப்பு வழங்கப்பெற்றது.

மரியசேவியர் அடிகள் கடந்த 55 ஆண்டுகளுக்கு மேலாக அரங்கினை மூலமாகக் கொண்டு பல்வேறு சமூகப்பணிகளை ஆற்றி வருகின்றார். அவரால் உருவாக்கப் பெற்ற திருமறைக் கலாமன்றம் கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியத்திலும், அரங்க மரபிலும், ஈழத்தின் அரங்க செயற்பாடுகளிலும் கடந்த அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக யுத்த காலம் முதலாக அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருவதனை யாவரும் அறிவர். அத்தகைய பணியானது கண்டுணரப் பெற்று இக்கௌரவம் வழங்கப் பெற்றமையானது சிறப்புக்குரியது.

## புனிதர் நிலைக்கு உயர்த்தப்படும் முதல் தமிழர் தேவசகாயம்பிள்ளை



தமிழ்நாடு நாகர் கோவிலைச்சேர்ந்த வேத சாட்சி தேவசகாயம் பிள்ளை (1712-1752) புனிதர் நிலைக்கு உயர்த்தப்படுகின்றார்.

இவ்வருட நிறைவில் இதற்கான அறிவிப்பை திருத் தந்தையின் பிரதிநிதி முறைப்படி வெளியிடவுள்ளதாக கோட்டாறு மறைமாவட்ட ஆயர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த வேதசாட்சியான தேவசகாயம்பிள்ளை சைவராக இருந்து திருமுழுக்குப் பெற்று கத்தோலிக்க கிறிஸ்தவ மறையை தழுவிய பின்னர் சாதிக்கொடுமை தமிழ்நாட்டில் தலை விரித்தாடிய காலகட்டத்தில் இறைவன் முன் அனைவரும் சமம் என்ற கருத்தை வலியுறுத்தி சாதி அடக்குமுறைக்கு எதிராக (12ம் பக்கம் தொடர்ச்சி)

## கத்தோலிக்க கூத்துமரபின் ஆடல் மீள் கண்டு பிடிப்புக்கு ஊக்கம் கொடுத்தவர் கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை

### நினைவேந்தல் நிகழ்வில் யோண்சன் ராஜ்குமார்

ஈழத்தின் நாடக வரலாற்றில் அமரர் கலாநிதி காரை சுந்தரம் பிள்ளை அவர்கள் மகத்தான பணிகளை ஆற்றி வந்தார் என கடந்த 02.08.2018 அன்று, பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெற்ற கலாநிதி காரை சந்தரம் பிள்ளை அவர்களின் 'தவம்' என்ற கவிதை நூல் வெளியீடும் அமரரின் அகவை எண்பது நினைவேந்தல் நிகழ்வில் சிறப்புரையாற்றிய திரு மறைக்கலா மன்ற பிரதி இயக்குநர் யோ. யோண்சன் ராஜ்குமார் அவர்கள் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் அமரர் காரை சுந்தரம்பிள்ளை அவர்கள் கவிஞராக, ஆசிரியராக அதிபராக, விரிவுரையாளராக, ஆசிரியர் கலாசாலை அதிபராக ஆய்வாளராக (தொடர்ச்சி 12ம் பக்கம்)




ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா:127:1)

# எமது எண்ணம்

## கற்றுக்கொள்கின்றோமா? கற்றுக்கொடுக்கின்றோமா?

கற்றுக்கொள்ளல், கற்றுக்கொடுத்தல் என்பன கல்வி உலகிற்கு மட்டுமன்று எமது நடைமுறை வாழ்வியலுக்கும் பொருந்துகின்ற ஒரு விடயமாகும். மனிதன் தன் வாழ்நாளில் எத்தனையோ விடயங்களை கற்றுக்கொள்ளவேண்டி உள்ளது. கற்றுக்கொடுக்கவேண்டியும் உள்ளது. கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு எனக் கூறுவர். நூல்களின் ஊடாக பெறும் நூலறிவும், அனுபவங்களின் ஊடாகப் பெறும் அனுபவ அறிவும் மனித வாழ்வில் இரண்டறக் கலந்தவை. எனினும் மனிதர்கள் தமது ஆயுள்வட்டத்தில் பூரணமாக அனைத்தையும் கற்றுதம் உலக வாழ்க்கைப் பயணத்தை முடித்தவர்கள் என்று எவரும் இருக்க முடியாது. எனினும், எமது குறுகிய வாழ்க்கை வட்டத்தில் நாம் கற்றுக்கொள்ளவேண்டியவற்றை கற்கவும், கற்றுக் கொடுக்கவேண்டியவற்றை கற்றுக் கொடுக்கவும் கடமைப்பட்டுள்ளோம் என்பது யதார்த்தமாவதுடன், மனிதத்துவத்தின் பூரணமும் அதுவே தான்.

தமிழினம் கற்றுக்கொள்ளவேண்டிய விடயங்கள் பல உண்டு. முள்ளிவாய்க்காலுக்கு முன்னும், முள்ளிவாய்க்காலுக்குப் பின்னும் என எமது வரலாற்றுப் பின்புலத்தில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பல பாடங்கள் இருக்கின்றன. அவற்றை நல்ல முறையில் கற்றுக்கொள்வதன் மூலம் நாமும் எமது எதிர்கால சந்ததியும் எமது தாயகத்தில் தலைநிமிர்ந்து வாழ முடியும். ஆனால், இவற்றை நாம் கற்றுக்கொள்கிறோமா? என்பதுதான் இன்றைய கேள்வி. குறிப்பாக இளம் தலைமுறையினர் கற்றுக்கொள்ளவேண்டிய பல பாடங்கள் கண்முன்னே விரிந்து கிடக்கின்றன. பாடசாலை பாடத்திட்டங்களுக்கு அப்பால் சமூக வாழ்வியலில் சமூக மயமாக்கலில் நாம் சந்திக்கின்ற விடயங்கள் எம் சிந்தனைகளை சீர்படுத்துவதாக அமைய வேண்டுமே தவிர சீரழிப்பதாக அமையக்கூடாது.

இன்று நாம் எவற்றைக் கற்றுக்கொள்கின்றோம்? வாளைத் தூக்குவதும், இரத்தம் சொட்டச் சொட்ட கைகளைத் துண்டம் துண்டம் ஆக்குவதும், தலைகளைக் கொய்வதும், சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதும், கஞ்சா கடத்துவதும், போதையின் பாதையில் பயணிப்பதும், வாகன விபத்துக்களை ஏற்படுத்துவதும், வெளிநாட்டு மோகத்தில் தாகம் கொண்டு அந்நிய கலாசாரங்களை அரவணைப்பதும் நாம் இன்று கற்றுக்கொள்கின்ற விடயங்களாக அமைந்துவிட்டன.

அண்மைக் காலங்களில் ஊடகங்களில் வன்முறைச் செய்திகள் இடம்பெறாத நாட்களே இல்லை எனலாம். வன்முறை அன்றாட பழக்கவழக்கங்களில் ஒன்றாகி வேடிக்கையான வாடிக்கையாகி விட்டதா? சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கலாசாரமாகிவிட்டதா? இவ்வன்முறைக் கலாசாரத்தை உருவாக்கி விட்டது யார்? ஊக்குவிப்பவர்கள் யார்? இவை தான் இன்று எமது கற்றல் சாதனங்களாக மாறிவிட்டதா? ஆவாக் குழுவினரும், குள்ளப்படையும், கிறிஸ் பூதங்களும் பாடம் நடத்துகின்றன. நாம் மாணவர்களாகி கற்றுக் கொண்டிருக்கின்றோம்.

இவ்வாறான சீரழிவுக் கற்கைகளை கற்றுக்கொண்டிருக்கும் நாம் அவற்றைத் தான் இன்று பிறருக்கும் கற்றுக்கொடுத்துக்கொண்டிருக்கிறோம். பிற்போக்குத் தனமான வாழ்க்கை முறைகளை நாம் வாழ்வதால் பிறர் எம் வாழ்வைப் பின்பற்ற முடியாத நிலை காணப்படுகின்றது. வெளிநாடுகளிலிருந்து நம் நாட்டிற்கு வருகின்ற எமது புலம் பெயர் உறவுகள் தமது பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு இங்கு வரும்போது அவர்களின் பிள்ளைகள் தாங்கள் இனிமேல் யாழ்ப்பாணத்திற்கு வரமாட்டோம் எனக் கூறிச் செல்வதை அண்மைக் காலங்களில் கேட்கமுடிகின்றது. காரணம் எம்மிடமிருந்து கற்றுக்கொள்ளக் கூடிய நல்ல விடயங்களோ, அவர்களைக் கவரக்கூடிய எந்த நன்மையோ எம்மிடமிருந்து கிட்டாத நிலையில் அந்த இளைய தலைமுறையினர் இத்தகைய வார்த்தைகளை விரக்தியின் விளிம்பில் நின்று உதிர்த்துவிட்டுச் செல்கின்றனர். அத்துடன் இங்கு நடப்பவற்றை அவர்கள் பார்த்து ஒருவகை அச்சத்திற்கு ஆட்படுவதால் பெற்ற தாயையும் பிறந்த பொன்நாட்டையும் கூட அவர்கள் மறந்து விடுவதற்கு நாம் தான் காரணமாக அமைகின்றோம்.

முன்னொரு காலத்தில் எம்மிடமிருந்து குறிப்பாக தமிழினத்திடமிருந்து உலகம் கற்றுக்கொண்ட பாடங்கள் ஏராளம் இருந்தன. ரஸ்யாவில் அமைந்துள்ள மொஸ்கோ பல்கலைக்கழகத்தின் நுழைவாயிலில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தமிழரின் பண்பாட்டு விருதுவாக்கு வளைவுப் பதாகையாக இடப்பட்டிருப்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். இப்படி எத்தனையோ நல்ல பல விடயங்களை உலகிற்கு காட்டிய அறிமுகப்படுத்திய தமிழினம் இன்று இழிவான சீரழிவுகளை கற்றுக்கொடுக்கும் நிலை கண்டு ஒவ்வொரு தமிழ் மகனும் தலைகுனிந்தாக வேண்டும்.

நாம் பிறரிடமிருந்து நல்லனவற்றைக் கற்றுக்கொள்வதுடன், பிறருக்கும் நல்லனவற்றை கற்றுக்கொடுப்பதே ஆரோக்கியமான சமூக கட்டமைப்பின் அடித்தளம் ஆகும் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். நல்ல கனிகொடுக்கும் மரங்களாக நாமும் சுவைத்து பிறரையும் சுவைக்க வைக்க இன்று அழைக்கப்படுகின்றோம். "நல்ல கனிகொடாத மரங்கள் எல்லாம் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும்" என்ற இயேசுவின் அருள்வாக்கு எம் வாழ்க்கைக்கு வழிகாட்டுவதாக.

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

# 'குடும்பங்கள் எனும் கருவூலம்' திருத்தந்தையின் செபக்கருத்து

அயர்லாந்தின் டப்ளின் நகரில் நடைபெறவிருக்கும் உலக குடும்பங்கள் மாநாட்டிற்கு தயாரிப்பாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் ஆகஸ்ட் மாத செபக்கருத்தை குடும்பங்களுக்காக அர்ப்பணித்துள்ளார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ஆகஸ்ட் மாதத்திற்குரிய செபக்கருத்தை திருத்தந்தையின் செபக்கருத்துக்களை ஒருங்கிணைக்கும் இயேசு சபை அமைப்பினர் The Pope Video காணொளி வழியே வெளியிட்டுள்ளனர்.

'குடும்பங்கள் எனும் கருவூலம்' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள இம்மாத செபக்கருத்தின் வழியே மனிதகுலத்தின் கருவூலமாக விளங்கும் குடும்பத்திற்காக செபிக்குமாறு திருத்தந்தை அழைப்பு விடுத்துள்ளார்.

### குடும்பம் என்ற புதையல்

குடும்பங்கள் என்றதும் புதையல் என்ற உருவகம் தன் நினைவுக்கு வருகிறது என்று இக்காணொளியின் தொடக்கத்தில் குறிப்பிடும் திருத்தந்தை இன்றைய உலகின் பல்வேறு அழுத்தங்களால் குடும்பம் என்ற புதையலை இழந்து விடும் ஆபத்தில் நாம் இருக்கிறோம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குடும்பம் என்ற புதையலின் முக்கியத்துவத்தை அரசுகளும், அரசியல் தலைவர்களும் உணர்ந்து அதற்கேற்றது போல் தங்கள் கொள்கைகளை வகுக்கவேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் விருப்பத்தைத் தெரிவித்துள்ளார்.


பொருளாதார அறிஞர்களும், அரசியல் தலைவர்களும் எதிர்காலத்தைக் குறித்து எடுக்கும் தீர்மானங்களில் சமுதாயத்தின் புதையலாக விளங்கும் குடும்பங்களைப் பாதுகாக்கும் முடிவுகளை அவர்கள் எடுக்கவேண்டுமென இயேசுவிடம் வேண்டிக்கொள்வோம் என திருத்தந்தை தன் ஆகஸ்ட் மாதசெபக்கருத்தாக வெளியிட்டுள்ளார்.

### உலக குடும்பங்கள் மாநாட்டிற்கு தயாரிப்பாக...

ஆகஸ்ட் மாதம் 21ம் தினதி முதல் 26ம் திகதி வரை அயர்லாந்தின் டப்ளின் நகரில் நடைபெறவிருக்கும் உலககுடும்பங்கள் மாநாட்டிற்கு ஒரு தயாரிப்பாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் ஆகஸ்ட் மாத செபக்கருத்தை குடும்பங்களுக்காக அர்ப்பணித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சாட்சிய வடிவங்களில் மிகசக்தி வாய்ந்தது பிறரன்பு

## திருத்தந்தை பிரான்சிஸ்



சாட்சிய வடிவங்களில் மிகசக்தி வாய்ந்தது பிறரன்பு எனவும் அதன் வழியே கடவுளின் அன்பை மக்கள் காண்பதாகவும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட டுவிட்டர் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### திருத்தந்தையின் டுவிட்டர் செய்திகள்

'பாலம் அமைப்பவர்' என்ற பொருள்படும் Pontifex என்ற இலத்தீன் சொல்லை தன் டுவிட்டர் முகவரியாகக் கொண்டு 2012ம் ஆண்டு டிசம்பர் 12ம் திகதி அதாவது 12-12-12 என்ற எண்ணிக்கை கொண்ட சிறப்பான நாளில் முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள் டுவிட்டர் செய்திகளை ஆரம்பித்தார்.

ஒவ்வொருநாளும் @pontifex என்ற வலைத்தள முகவரியில் திருத்தந்தை வழங்கி வரும் டுவிட்டர் செய்திகள் இத்தாலியம், ஆங்கிலம், பிரெஞ்சு, இஸ்பானியம், போர்த்துகீசியம், ஜேர்மன், போலந்து, இலத்தீன் மற்றும் அரேபியம் ஆகிய ஒன்பது மொழிகளில் வெளியாகின்றன.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்திகள் இதுவரை 1,641 என்பதும் அவரது செய்திகளை ஆங்கில மொழியில் பின்பற்றுவோரின் எண்ணிக்கை மட்டும் ஒரு கோடியே 77 இலட்சம் மக்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### திருத்தந்தையின் இன்ஸ்டக்ராம்

@franciscus என்ற பெயரில் இயங்கிவரும் இன்ஸ்டக்ராம் முகவரியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செயற்பாடுகளை மையப்படுத்தி அவ்வப்போது வெளியிடப்பட்டு வரும் படங்கள் மற்றும் காணொளிகள இது வரை 576 என்பதும் அவற்றைப் பின்பற்றுவோரின் எண்ணிக்கை 57 இலட்சம் மக்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வேலையில்லா இளையோரின் அடிப்படை மாண்பை நிலைநாட்டும் முயற்சியில் இயேசு சபையின் இளம் துறவியர் ஈடுபடவேண்டும்

## திருத்தந்தை பிரான்சிஸ்

ஐரோப்பிய நாடுகளில் இயேசு சபை பயிற்சி நிலையில் இருப்போர் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை வத்திக்கானில் சந்தித்த வேளையில், வேலையின்றி இருக்கும் இளையோரைக் குறித்து இயேசுசபையின் இளம் துறவி ஒருவர் எழுப்பிய கேள்விக்கு திருத்தந்தை நீண்டதொரு பதிலை வழங்கினார்.

வேலையில்லா நிலை மாண்பைச் சிதைக்கிறது. திறமைகளும், தகுதிகளும் உள்ள இளையோர் வேலையின்றி இருப்பது வெறும் பொருளாதாரம் தொடர்பான பிரச்சனை அல்ல. மாறாக, அந்நிலை இளையோரின் தனிப்பட்ட மாண்பைச் சிதைக்கிறது என்பதே பெரும் பிரச்சினை என்று திருத்தந்தை தன் பதிலுரையில் தெளிவுபடுத்தினார்.

பொருளாதார மற்றும் வர்த்தக நிறுவனங்களில் பணத்திற்கு அளிக்கப்பட்டுள்ள மிக உயர்ந்த நிலை அனைத்து இளையோரையும் பணம் திரட்டும் ஒரே குறிக்கோளுக்குள் சிக்க வைக்கிறது என்றும், அவர்களில் பலர் விரைவில் தங்கள் வேலைகளில் வேறு எந்த நிறைவும் பெறாமல் தவிக்கின்றனர் என்றும் திருத்தந்தை சுட்டிக்காட்டினார்.

வேலையற்ற இளையோரின் ஆபத்தான முடிவுகள் நிறைவு தராத இந்த வெற்றிடத்தை சமாளிக்க இயலாத இளையோர் தற்கொலை, போதைப்பொருள் அல்லது தீவிரவாதக் குழுக்கள் என்ற ஆபத்தான வழிகளைத் தெரிவு செய்கின்றனர் என்பதையும் திருத்தந்தை இளம் இயேசு சபையினரிடம் கவலையுடன் தெரிவித்தார்.

ஆபத்தான இவ்வழிகளில் தங்களையே இழந்து வரும் இளையோரைக் குறித்து அரசுகளும், ஊடகங்களும் அமைதிகாப்பதனால் இந்தஆபத்தின் வீரியத்தை நாம் உணராமல் போகின்றோம் என்ற எச்சரிக்கையையும் திருத்தந்தை தன் பதிலில் கூறினார்.

வேலையில்லா நிலையில் இருக்கும் இளையோரைச் சந்திக்கும் வேளையில் அவர்களின் மாண்பை நிலைநாட்டும் முயற்சிகளில் இளம் இயேசுசபையினர் முதலில் ஈடுபடவேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

### மடுத் திருத்தலத்திற்கு பாதயாத்திரை

குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்கினைச் சேர்ந்த இறைமக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் இம்முறை மடுத் திருத்தலத்திற்கு பாத யாத்திரையாக 03.08.2018 அன்று புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

பக்திபூர்வமாக மக்கள் மேற்கொண்டுள்ள இப்பயணம் மரியன்னை மீது மக்கள் கொண்டுள்ள பக்தியை இன்றைய காலகட்டத்தில் எடுத்துக் காட்டுகின்றது.

# புனித கன்னிமரியாவின் விண்ணேற்பு

கி.பி. 5ம் நூற்றாண்டில் ஜெருசலேமில் ஆவணி 15ம் நாள் புனித அன்னை மரியாவின் நினைவு கொண்டாடப்பட்டது. கி.பி. 6ம் நூற்றாண்டில் இப்பெருவிழா புனித மரியா ஆண்டவரிடம் இளைப் பாறிய பெருவிழாவாக கீழ்த்திசை நாடெங்கும் பரவியது. இவ்விழா கி.பி. 7ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உரோமைப் பட்டியலில் இடம்பெற றது. இறுதியாக 8ம் நூற்றாண்டில் புனித கன்னி மரியாவின் விண்ணேற்புவிழா எனக் கொண்டாடல் ஆரம்பமாகியது.

"வானில் பெரியதொரு அடையாளம் தோன்றியது. பெண் ஒருவர் காணப்பட்டார். அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார். நிலா அவரது காலடி யில் இருந்தது. அவர் பன்னிரு விண்மீன்களைத் தலைமீது சூடியிருந்தார். அவர் கருவுற்றிருந்தார். அரக்கப்பாம்பு பிறக்கும் குழந்தையை விழுங்குமாறு காத்திருந்தது. ஆனால் ஆண்பிள்ளை பிறந்தது. கடவுளது அரியணைக்குப் பறித்துச் செல்லப்பட்டது. அப்பெண் பாலை வனத்திற்கு ஓடிப்போனார்"

(திருவெளிப்பாடு 19:19.20:1-6).

இறை ஆட்சி சாத்தானின் கட்டுப்பாட்டை வென்று மேலோங்கியிருக்கும் உண்மையை இக்காட்சி வலியுறுத்துகின்றது. இறுதி நாளில் இயேசு மாட்சிமையு டன் வருவது நிச்சயமாக நிகழும். சாத்தானால் உல கினை ஏமாற்றமுடியாமல் போய்விடுகின்றது. இயேசுவோடு இணைந்திருந்து திருச்சபை உலகினை வெல்கின்றது. இறைவன் உலக மக்களோடு கொண்ட உடன்படிக்கை உறவு இயேசு திருச்சபையில் ஆட்சிசெய்வதன் மூலமாகப் புதுப்பிக்கப்படுகின்றது.

அருட்கலாநிதி வின்சன் பற்றிக் (அமதி)

லூக்கா நற்செய்தி 2: 47-56 பகுதியில் வரும் மரியாவின் பாடல் பின்வரும் சிறப்பம்சங்களை வெளிப்படுத்துகின்றது. அவையாவன:

1. இப்பாடல் கடவுளின் அருளுக்கு மரியா நன்றியுணர் வோடு விடுத்த பதிலோடு ஆரம்பமாகின்றது. இறை அழைத்தலின் விளைவே மரியாவின் ஆசீர்வதிக்கப்பட்ட தன்மையாகும்.

2. மரியாவின் புகழ்பாடல் தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ராயேல் மக்களுக்கான இறைதிட்டத்தைப் பிரதிபலிப்பதாய்



கடவுளின் அருளை விசாலப்படுத்துகின்றது.

3. எலிசபேத்தின் புகழ்பாடல் மரியாவிற்கு ஊக்குவிப்பாய் இருந்தது.

4. மரியாவின் புகழ்பாடல் தான் பெறவிருக்கும் மகனை மையப்படுத்தாமல் மெசியாவை அனுப்பிய தந்தையையே மையப்படுத்தியதாக அமைந்தது.

5. இயேசுவின் முதற் பிறப்பைவிட இயேசுவின் 2ம் வருகையை மரியா முதன்மைப்படுத்தினார்.

**மரியாவின் மகத்துவத்தை விளக்கும் 7 படிகள்:**

1. மரியா இறைவார்த்தையில் கொண்டுள்ள விசுவாசத் தாலும், இறைசித்தத்திற்குக் கட்டுப்படும் கீழ்ப்படிதலாலும் சீடத்துவத்தின் மாதிரியாகத் திகழ்கின்றார்.

2. இறைவார்த்தையோடு இயைபுற்றுப்போகும் ஆழமான தன்மையினால் மரியா சீடத்துவத்தின் மாதிரியாகத் திகழ்கின்றார்.

3. இறையருளை உள்வாங்கியதோடு இறையருளைப் பெற்றதற்குப் பொருத்தமான நன்றியுணர்வை வெளிப்படுத்தி மரியா சீடத்துவத்தின் மாதிரியாகத் திகழ்கின்றார்.

4. நற்செய்தியின் சமூகப் பிரதிபலிப்பை உள்வாங்கியதன் மூலமாக மரியா சீடத்துவத்தின் மாதிரியாகத் திகழ்கின்றார்.

5. கடவுளுடைய திட்டங்களையும் உறுதிமொழிகளையும் உள்வாங்கியதன் மூலமாக மரியா சீடத்துவத்தின் மாதிரி யாகத் திகழ்கின்றார்.

6. கடவுளுக்குரியவற்றைப் புலப்படுத்தும் பிரதிபலிப் பாலும், தியானத்தாலும் மரியா சீடத்துவத்தின் மாதிரி யாகத் திகழ்கின்றார்.

7. மரியாவின் புகழ்பாடல் இறைவனுக்கு ஏற்ற ஆராதனை யாகவும், எலிசபேத்தைத் தூண்டுவிக்கும் நற்செயலா கவும் இருந்ததால் மரியா சீடத்துவத்தின் மாதிரியாக விளங்குகின்றார்.

எனவே, அன்பு நெஞ்சங்களே, திருப்பயணி களாய் திருச்சபையில் பயணிக்க ஆர்வத்தோடு ஆயத்த மாகுங்கள். இது தொடர்பாகச் செய்ய வேண்டியவை:

1. இறை காருண்யத்தை, இறைவனின் தாராள மனப் பான்மையை அடிக்கடி உங்கள் மனக் கண்முன் வையுங்கள்.

2. உலக செல்வத்திற்கும் மேலாக இயேசு எனும் அளப்பரிய அன்புத் தெய்வத்தின் பார்வையில் கவனத்தைச் செலுத்துங்கள்.

3. பகிர்ந்து வாழும் மனப்பக்குவ நிலைக்கு முதலிடம் கொடுங்கள்.

4. எழையரின் ஏற்றத்திற்காகச் செலவிடும் பழக்கத்தை அதிகரியுங்கள்.

5. மண் ஈர்ப்பிலிருந்து விடுபட்டு விண்ணீர்ப்பு சார்ந்து செயற்பட, புன்னகை பூத்த முகத்தோடு பயணியுங்கள்.

# அம்மாவைக் காண முடியுமா....?



**முகவுரை**

நம் நாட்டில் ஒரு ஆச் சரியமான ஆனால் மகிழ்ச்சியான விடயம், கிறிஸ்தவர்களை மட்டு மல்ல ஆயிரக்கணக்கான ஏனைய மதத்தினரையும் கவர்ந்திழுக்கும் தேவதாயாரின் சக்தியாகும். ஒரு பெண் என்ற முறையில் பெண்கள் மரியாவு டன் ஒரு பண்பொருமைப்பாட்டைக் காண்கின்றனர். ஆண்களும் பெண்க ளும் ஒரு தாய் என்ற விதத்தில் அவரி டம் பெரிதும் ஈர்க்கப்படுகின்றனர். மரியா அனைத்துலகத் தாய். ஆகவே அவரிடத்தில் மக்களுக்கு ஒரு தனிப்பட்ட, சில சமயம் உணர்ச்சிகரமான அன்பு உண்டு. தமிழ்நாட்டில் உள்ள வேளாங் கண்ணி, எமது நாட்டில் உள்ள மடுத் திருப்பதி, தேவத்தை போன்ற திருத் தலங்கள் ஆயிரக்கணக்கான யாத்திரி கர்களைக் கவரும் இடங்களாய் உள் ளன. வழக்கமாக வரும் ஆயிரக்கணக் கான ஏழைகளும், ஏதிலிகளும், செல்வந் தர்களும், தொழில் அதிபர்களும் வர்க்க பேதங்களை மறந்து ஒன்றாகக் கூடிநின்று அன்னையை வணங்குவார்கள்.

*நவீனகால உளவியலாளரின் சான்று*

நவீனகால உளவியலாள ருள் செல்வாக்கு மிக்க ஒருவரான கார்ல் ஜுங் (Karl Jung) என்ற கிறிஸ்தவ சமயத்தவர் கிறிஸ்தவர் புனித கன்னிமரியாவை தமது சமய அனுசாரங்களில் பின்னோக்கித் தள்ளிவிட்டார்கள் என்றும், இதனால் வருந்தத்தக்க ஒரு பெரும் பிழையைச் செய்து தம்மை ஆன்மீக அநாதைகள் ஆக்கிவிட்டனர் என்றும் கவலைப்படுகின் றார். எமது உடல், உள, ஆன்மீக வளர்ச் சிக்கு ஒரு தாய் தேவை. எமது ஆன்மீக வாழ்வில் தாய்க்குரிய இடத்தை கன்னி மரியாள் வகிக்கின்றாள்.

*அம்மா வரவேண்டாம்*

புதிய பெந்திக்கோஸ்தே சபை யினர் கன்னிமரியாவின் பக்தியை கடுமையாகத் தாக்கி வரும் இக்காலகட்டத் தில் பின்வரும் சம்பவத்தை நாம் மன- தில் கொள்ளவேண்டும். ஒரு இயேசு சபைக் குருவானவரின் தந்தை ஒரு பெந்திக்கோஸ்தே கிறிஸ்தவருடன் நெருங் கிய நட்புக்கொண்டிருந்தார். அவர்கள் அடிக்கடி நட்புரிமையுடன் கன்னிமரியாவுக்கு கத்தோலிக்கர் செலுத்தும் வணக்கம் உட்பட பல்வேறு மதம் சம்பந்தமான விடயங்களை பற்றி உரையாடுவது வழக்கம். அந்த நண்பர் தேவதாயின் பக்தியை மிகைப்படுத்தப்பட்ட ஒன்றாகவும், தப்பானதாகவும் கூடக் கருதி னார். ஒருநாள் அவர் தமது தாயுடன் கத்தோலிக்க நண்பரின் வீட்டிற்கு வந்தார். வழக்கம் போல் அவர் அன்புடன் வரவேற் கப்பட்டார். ஆனால் அவர் வீட்டுக்குள் காலடி வைத்தபோது வீட்டுக்காரர் 'நண் பரே, உம்மை நாம் அன்புடன் வரவேற்கி றேன். ஆனால், தயவுசெய்து உமது தாயாரை உள்ளே அழைத்துவரவேண் டாம்" என்று கூறினார். கிறிஸ்தவ நண்பருக்கு அவமானமாக இருந்தது. அவர் கோபத்துடன் "எனது தாயாரை என்னோடு வீட்டுக்குள் அனுமதிக்கா விட்டால் நானும் வரப்போவதில்லை" என்றார். கத்தோலிக்க நண்பரோ புன்னகையுடன் "உம்முடைய அம்மாவை தாராளமாக அழைத்து வாரும். அவர்

அருட்பணி
மா.றேஜிஸ் இராசநாயகம்

வருவது எனக்கு மகிழ்ச்சியே. நான் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டத்தான் விரும்பினேன். நீர் வரலாம், ஆனால் உமது தாயார் வரக்கூடாது என்று சொன்னபோது நீர் அவமதிக்கப்பட்டதாகக் கருதினீர் அல்லவா? அதுவும் சரியே. நீர் இயேசுவை உமது வாழ்வில் வரவேற்று அவரது தாயாரை வேண்டுமென்றே வெளியே விட்டால் இயேசுவுக்கு எப்படி இருக்கும் என்று நினைக்கிறீர்?" என்றார். கிறிஸ்தவ நண்பர் இந்த நியாயத்தை ஏற்றுக்கொண்டார். தனது தாயாரை எமது வாழ்விலிருந்து நீக்கிவிட்டால் இயேசு தான் அவமதிக்கப்பட்டதாகவே கருதுவார்.

*அன்னை வழி அண்டவரிடம்..*

இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் இருக்கும் ஒரே இடைநிலை யாளர் இயேசுவே என்றும், இயேசு மூல மாக அல்லாமல் எவரும் தந்தையிடம் போகமுடியாது என்றும் கிறிஸ்தவ சபையினர் கூறலாம். அவர்கள் கூறுவது சரியே. "மரியாவிடமிருந்து அறிமுகக் கடிதம் இல்லாமல் நாம் நேரே இயேசு விடம் போகமுடியாதா? என்று அவர்கள் கேட்கலாம். அதற்கு விடை "ஆம், போகமுடியும்". எமது தனிச்செபத்திலும் திருவழிபாட்டிலும் நாம் அடிக்கடி அவ்வாறு போகிறோம். அயினும், புனித கன்னிமரியாள் கிறிஸ்துவை அடைவதற்கு, தந்தையை அடைவதற்கு ஒரு சிறப்பான வழியாவார். அவர் நாம் இயேசுவை சந்திப்பதை இலகுவாக்குகின்றார்.

இறைமகனும் எமது மீட்பருமான இயேசு எந்த இடையீட்டாளரும் இன்றியே ஒரு வளர்ந்த ஆளாக உலகிற்கு வந்திருக் கலாம். ஆயினும் தம்மை உலகிற்கு அளிக்க மரியாளைத் தேர்ந்தெடுத்தார். கன்னிமரி யாளின் திருவயிறு என்னும் வாசல் வழி யாகவே அவர் உலகிற்கு வந்தார். மரியாள் என்னும் அதே வாசல் வழியே சென்று இயேசுவைச் சந்திப்பதில் தவறு என்ன? இயேசு மரியாவை அம்மா என்று அழைத்து அவரைக் கௌரவித்தார். நாமும் அவரை அன்னை என்று அழைக்க உரிமை தந்து எம்மைக் கௌரவித்தார்.

*மகிமைப்படுத்தப்பட்ட மரியா*

தமது ஒரே மகனும் எமது மீட்பருமான இயேசுவை உலகிற்கு அனுப்புவதற்கு முன் தந்தையானவர் தமது திருமகனுக்கு தாயாக மரியா வைத் தேர்ந்தெடுத்து அவருடைய சம் மதத்தையும் கேட்டார். கடவுளுக்கு ஒரு மனித உடலையும், மனித ஆன்மாவையும் அளிப்பதில் மரியா- வோடு ஒத்துழைத்து தூய ஆவியானவர் மரியாவைக் கௌரவித்தார்.

தூய ஆவியின் வல்லமையால் கன்னி மரியாவின் திருவயிற்றில் வார்த் தையானவர் மனிதனானார். தந்தை மகன் தூய ஆவி ஆகிய மூவரும் தெய் வீகத்தைத் தவிர்ந்த, மிக உயர்ந்த கௌரவத்தை அளித்த மரியாளுக்கு நாம் விசேட வணக்கம் செலுத்துவதில் தவறு என்ன இருக்கமுடியும்?

*எனவே....*

மரியாவைக் கௌரவிக்கும் சிறந்த வழிகளில் ஒன்று அவரைக் கண்டு பாவிப்பதாகும். அவர் எமக்கு சிறந்த முன் மாதிரியாக இருக்கின்றார். அவரைக் கௌர விக்கும் மற்றொரு சிறந்த வழி அவரிடம் செபிப்பதாகும். மரியாவுக்குரிய பல்வேறு பக்தி முயற்சிகளுள் செபமாலையே வர லாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளது. போலி யான இறையியல் போக்குகளாலும், வாழ்க்கை உலகமயமாக்கப்படுவதாலும், பொழுதுபோக்கு சாதனங்களை மேன்மேலும் தேடுவதாலும் அநேக கத்தோலிக்க இல்லங் களில் அவர்களது செப வாழ்வில் இருந்து செபமாலை நீக்கப்பட்டு விட்டது.

செபமாலையின் மறைபொருள் கள் நற்செய்தி பற்றிய தியானங்களே. செப மாலையில் வாய்ச்செபமும் உண்டு. மனச் செபமும் உண்டு. எமது உடல், உள்ளம், கற்பனை அனைத்தையும் கொண்டு செபிக்கி றோம். "மலர்களோடு சொல்வது" என்று சொல்வார்கள். செபமாலை ஒரு ரோஜா மலர்ச்செண்டாகும். ஆகவே அதைச் செபிக்கும்போது ரோஜா மலர்களோடு சொல்கிறீர்கள்.... "மரியாயே என் நல்ல தாயாரே, நான் உம்மை நேசிக்கிறேன்" என்று சொல்லுவோம். தாய்ப்பாசம் உள்ள பிள்ளை தவறினாலும் அழிந்து போகாது.

*தாய்க்கு அன்பு வற்றிப் போகுமோ?*
*தனது பிள்ளை அவள் மறப்பாளோ?*

# உயிரளிக்கும் உடனிருப்பு நற்கருணை

**முன்னுரை**

கடவுளின் அன்பின் வெளிப்பாடு நற்கருணை. இந்த நற்கருணையின் உடனிருப்பு நமது நாளாந்த வாழ்விலும் தொடரப்படுகின்றது. கிறிஸ்தவ வாழ்வின் தேடல்களில் நற்கருணையின் பிரசன்னம் நாளாந்த திருப்பலியில் பெறப்படுகின்றது. எனவே தான் "நற்கருணை திருச்சபையின் ஊற்றும் மையமுமாக உள்ளது". இன்று கிறிஸ்தவ மக்களின் உயிரும், மூச்சுமாக இருப்பது இந்த தெய்வீக பிரசன்னமேயாகும்.

**நற்கருணையின் பெருமையும் அதன் சிறப்பும்**

புனித அகுஸ்தீனார் நற்கருணை பற்றிக் கூறியது. "கடவுள் நிறைவான ஞானமுடையவராக இருந்தும் தன்னுடைய அன்பை வெளிப்படுத்த நற்கருணையை ஏற்படுத்துவதைத் தவிர, வேறு மேலான வழியை தனது ஞானத்தால் கண்டறியவில்லை. கடவுள் எல்லாக் கொடைகளின் ஊற்றாக இருந்தும் நற்கருணையை விட விலை மதிப்புடைய கொடையை அவரால் கண்டுபிடிக்க இயலவில்லை. எனவே தான் இந்த நற்கருணையில் தமது பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறார். நற்கருணையானது இரு கொடைகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

**1. உறவைத் தரும் விருந்து**

மனித வாழ்வு உறவுகளின் கூட்டமைப்பு என்பார்கள். உறவுகள் தான் மனிதனுக்கு உணர்வைக் கொடுக்கின்றது. ஒரு கிறிஸ்தவனுக்கு உறவைப் பலப்படுத்தும் உணவு என்றால் அது நற்கருணைப் பலியின் வழியாக மட்டுமே அதைப் பெற முடியும் என்பது உண்மை. இன்றைய நவநாகரிக உலகில் உறவுகளின் உண்மை நிலை உதட்டில் பூசப்பட்டுள்ள சாயத்தைப் போன்றதாக உள்ளது. மனித உறவுகள் தேவைக்கும், காலத்திற்கும் மாற்றம் ஏற்படுத்தும் வகையில் காணப்பட்டு வருகின்றது. மனித கலாசார பண்பாட்டு ரீதியிலான உறவுகளில் உண்மையற்ற நிலை அதிகரித்து விட்டது. இயந்திரங்களுடன் பணிபுரியும் மனிதர்களுடைய வாழ்வு இயந்திர உறவு நிலையைத் தமதாக்கி வாழும் அவல நிலையாகும்.

**2. உணர்வைத் தரும் விருந்து**

நாம் வாழும் உலகம் மனித உணர்வும், மனித நேயமும் அற்ற நிலையில் வளர்ந்து வருகின்றது. இந்தச் சூழ்நிலையில் நமது உறவில் ஒற்றுமையும், உணர்வில் ஒருமையும் ஒன்றாக்கப்படவேண்டும். மனித உறவால் உணர்வு அற்றுப்போகும்போது மனிதநேயம் பிரிக்கப்படுகின்றது. உதாரணமாக ஒரு உணவில் உப்பு இல்லையென்றால் அதன் சிறப்பும் சுவையும் குறைவடைகின்றது. அவ்வாறு தான் மனித வாழ்விலும் மனிதம் மறைக்கப்படும் போது மனிதர்கள் மனித மாண்பை இழக்கின்றார்கள். அவ்வாறான நிலையில் கிறிஸ்தவ வாழ்வின் மைய மும் உயிர்நாடியுமான நற்கருணை நம் மத்தியில் உணர்வைத் தரும் அரும்மருந்தாக பிரசன்னமாக்கப்படுகின்றது.

**நற்கருணை பற்றிய உண்மை நிலை**

இலத்தீன் அமெரிக்கா எல்சால்வடோர் மாகாணத்தில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் இச்சம்பவம் நடந்தது. ஒரு நாள் மாலை இராணுவ வீரர்கள் அக்கிராமத்தினுள் புகுந்து நற்கருணைப் பேழையை உடைத்து அதிலிருந்த நற்கருணையைத் தெருவில் தூக்கியெறிந்தனர். இதையறிந்து அத்திரமடைந்த மக்கள் அந்த மறை மாவட்டத்தின் ஆயராக இருந்த கெல்ட்டர் கமராவைச் சந்தித்து நடந்தவைகளை விபரித்தனர். அதனை அமைதியாகக் கேட்ட ஆயர் இதற்கு என்ன செய்யலாம் என்று கேட்டார். அவர்கள் இனி இப்படிப்பட்ட சம்பவங்கள் இந்த மறைமாவட்டத்திலே நடைபெறாத வண்ணம் மாபெரும் கண்டன ஊர்வலம் நடத்தவேண்டும். அதன் பின் பொதுக்கூட்டம் வைத்து நமது எதிர்ப்பினை அரசுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றனர். உடனே ஆயர் அவர்களுக்கு சம்மதம் தெரிவித்தார்.

அன்று ஞாயிற்றுக்கிழமை மக்கள் அனைவரும் பெரும்திரளாக ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். தங்களுடைய எதிர்ப்பு

**அருட்பணி.ம.நிர்மலராஜ் செ.தா**

களை கோசங்கள் மூலம் வெளிப்படுத்தினர். இறுதியில் ஆயர் அவர்கள் உரையாற்றினார். அந்த உரையின் சாரம்:

"அன்பார்ந்த மக்களே! நற்கருணை ஆண்டவரை தெருவிலே தூக்கியெறிந்த உடனே நீங்கள் அனைவரும் என்னிடம் வந்து முறையிட்டு மாபெரும் ஊர்வலத்தை ஏற்பாடு செய்தீர்கள். மறை மாவட்டத்திலுள்ள பெரும்பான்மையான மக்கள் இன்று இதில் கலந்து கொண்டீர்கள். உணர்வுபூர்வமான உங்களது எதிர்ப்பை உரத்த குரலெழுப்பி இவ்வூர்வலத்தை உயிரோட்டம் மிக்கதாக மாற்றியிருக்கிறீர்கள். நற்கருணை மீது உங்களுக்குள்ள மரியாதையையும் விசுவாசத்தையும் நான் பாராட்டுகிறேன். ஆனால் என் மனதில் ஒரு சிறிய வருத்தம் .... இந்த எல்சால்வடோர் பகுதியிலே எத்தனையோ மனிதர்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, உறங்க உறைவிடமின்றி தினமும் சாலை யோரத் தில் மடிந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களைப் பற்றி என்னிடம் ஒருமுறை கூட நீங்கள் முறையிட்டதில்லை. நற்கருணை ஆண்டவரை தெருவிலே தூக்கி எறிந்ததற்கு இந்த மறைமாவட்டமே ஒன்று கூடி வந்தது. ஆனால் இந்த மனிதர்களுக்காக நாம் ஒன்றும் செய்யவில்லையே, அவர்களைப் பற்றி நாம் கவலைப்படவில்லையே. நற்கருணை ஆண்டவர் மீது நமக்குள்ள விசுவாசம் உண்மையானதாக இருக்கவேண்டுமெனில் நம்முடைய கவனம் இவர்கள் மீதும் திசைதிரும்ப வேண்டும். அப்போதுதான் நம்முடைய விசுவாசம் செயலுள்ளதாகவும், பொருளுள்ளதாகவும் அமையும்" என்று கூறினார்.



**நிறைவாக..**

நற்கருணையானது நம்முடைய வாழ்வின் யதார்த்த வாழ்வின் நிகழ்வுகளில் வாழப்படவேண்டிய ஒரு உண்மை நிலை. இது நம் மத்தியில் நிலை வாழ்வையும், மறு உலக வாழ்விற்கான அழைப்பைத் தரும் ஒரு தெய்வீக ஊடகமாகவும் இருக்கின்றது.

நற்கருணையின் உயிரளிக்கும் உடனிருப்பு நம் மத்தியில உண்மை, அன்பு , தியாகம், பகிர்வு, ஒற்றுமை, மனித நேயம் போன்ற உணர்வுகளால் வாழப்படவேண்டும். இந்த மனித உறவு நிலைகள் எம்மத்தியில் வாழப்படாவிட்டால் நமது கிறிஸ்தவ சாட்சிய வாழ்வில் நற்கருணையின் பெருமையையும், அதன் மகத்துவத்தையும் இன்னும் உணரவில்லை என்ற ஆழமான உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். எனவே தான் நற்கருணை இறையாட்சியின் ஓர் அடையாளம் என்றும், இயேசுவின் இலட்சிய வாழ்வின் மையம் என்றும் கூறப்படுகின்றது. எனவே திருச்சபையின் வாழ்விற்கும், நற்செய்திப் பணிக்கும் ஊற்றும், உடனிருப்புமான நிலை யில் நற்கருணையின் மேம்மையை நமதாக்கி வாழ முற்படுவோம்.

# அருள்நிறைந்த மரியே வாழ்க

**"வானவன் தூது சொல்ல**
**வையகம் வியந்து நிற்க – உம்**
**திருவிதழ் அவிழச் சொன்னாய்**
**யான் உம் அடிமை**
**உந்தன் ஆணையே**
**என்னில் மலர்க"**

அளவிட முடியா அருள்நிறைந்து நெஞ்சை அள்ளும் கொள்ளை அழகைக் கொண்ட நினைவுக்கு அடங்காத நேசம் கொண்ட இளம் மாது இவர் யாரோ? தன் உள்ளம் என்னும் அறையில், தனிமையில், மௌனமாக ஓசையின் தித்திப்பில் இறைபுகழ் பாடும் "மரியா" என்னும் மாமங்கை. "அருள் நிறை மரியே வாழ்க" என்ற மணிமொழி கேட்டு பரமானந்தம் கொள்ளும் தனது நிலை பறிபோக பதைபதைக்கும் உள்ளத்துடன் வாழ்ந்து வந்த திசையை நோக்குகிறாள். வானவன் வாழ்த்திய "அருள்நிறை மரியே வாழ்க" என்ற இவ்வாழ்த்தின் பொருள் யாதோ எனக் கலங்கும் நெஞ்சத்திற்கு ஆண்டவர் அனுப்பிய ஆசிமொழி.

தூதனின் நேர்த்தி மிகுந்த அற்புத மொழி மீண்டும் ஒலிக்கிறது. "அருள் நிறைந்த மரியே வாழ்க". (அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க தற்போதைய நடைமொழியில்) ஆம், அருள் பூரணமாக நிறையப் பெற்றவர். எந்தவொரு பதவியும் வகிக்கத்தக்க ஆற்றல் நிறைந்தவர். புனித தோமா அக்குவினாரின் வார்த்தையில் சொல்லப் புகுந்தால் "நிறைவு" அல்லது "பூரணம்" என்பது இரு பொருள் கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

1. குறை இல்லாது அளவு கடந்து வரையின்றி கடலைப் போல அருள் அனைத்தும் திரண்டு நிற்கும் நிலை. இந்நிலை கொண்டவர் கிறிஸ்து ஒருவர்தான்.



2. இன்னொரு விதம் அருளைக் கொண்ட ஆள். இந்நிலைதான் மரியன்னைக்கு பொருந்துவதாகும்..

உயர்ந்த பதவிக்குப் போதிய பேரருளின் நிறைவு. இதை நம் நாவால் நவில முடியாது. "தேவனின் தாய்" என்கிற சாலச் சிறந்த பதவி ஒப்புயர்ந்த பதவிக்கு இறைவனால் பூரணப்படுத்தப்படும் மனவாக்குக்கெட்டாத இணையற்ற நிறைவு. இந்நிலையை மாபெரும் வேதசாஸ்திர நிபுணர்கள் பற்பல விதத்தில் கடின முயற்சி எடுத்து விபரிக்க முனைந்தார்கள். "பிள்ளை கடவுளானதால் தாயின் பெருமை ஒரு விதத்தில் வரம்பில்லாதது என சொல்ல முனைந்தார் புனித ஆல்பேட்.

"அருள்நிறை மரியே" என வானவர் கூறப் பணித்த பரமன் மரியன்னையில் காட்டிய பேரன்பு "எனக்கு பிரியமானவளே! நீ செழித்தோங்கும் நந்தவனம். எழில்மிகு நறுமலர்க்கூட்டம். இன்பக் கனி குலுங்கும் நறுமணப்பூங்கா" என்பதே.

அருள்பெருக்கெடுத்தோடும் கடல் கரைகாணாது நிற்கும் கடலாக காண விழைந்தார். புனித பொனவெந்தூர் எப்படி ஆறுகள் ஓடிப்புகுந்து கடலைப் பெருக்குகின்றதோ அதுபோல புண்ணிய வரங்கள் அனைத்தும் இணைந்து ஓடிப் பெருகிய கடலென காட்சி அளிக்கின்றாள் எம் கடவுளைப் பெற்ற கன்னித்தாய்.

புண்ணியங்களின் ஊற்று. அன்னையின் வாழ்வில் அடித்

**அருட்சகோதரி: மேரி அன்ரோனியா செ.க.**

தளம் தாழ்ச்சியே. தாழ்ந்து பணியும் பண்பே இறைவனின் உள்ளத்தில் அழகுள்ளதாக காணப்பட்டு பதிந்த முதற் பார்வை எனலாம். தாழ்ந்து பணிந்தாள். அடிமை நிலைக்குரியவள் என்கிற மனநிலை கொண்டு தாழ்ந்தோர் உயர்த்தப்பெறுவர் என்கிற விசுவாசத்தால் நிறைந்திருந் தாள். அன்பு என்னும் கனி அவள் வாழ்வில் தழைத்தோங்கியது. புண்ணியங்களின் விதிவிடமே அன்னை மரியா என்றும், உலகிலே அவளைவிட மேலான வேறொருவர் இல்லையென்றும் கூறப்புகுந்தால் இல்லையென்று மறுப்போர் யாரோ?

**அன்னை வழியாக உரிமையும், பேறும் பெற்ற மனுக்குலம்**

வானில் நின்று வந்த தூதன் வாழ்த்திய "அருள்நிறை மரியே" என்கிற வாழ்த்துரையை இன்னுமொருவர் வாழ்த்தினால் அவரும் இன்னுமொரு வானதூதரே என்றால் மிகையாகாது. இதனால் "அருள் நிறை மரியே" என்று வாழ்த்தி செபிக்கும் நாம் ஒவ்வொருவரும் ஒரு வானதூதர் எனக் கூறலாம். இந்தப் பேறுடைமையை நாம் பெற்றுக்கொள்ளக் காரணமாக இருந்தது "தேவதாய் - தேவதூதன்" சந்திப்பை ஏற்படுத்திய இறைவனின் கருணையே ஆகும். தேவதூதன் வழியாக தரப்பட்ட இந்த அருள்மொழியை லூர்து பதியிலும், பாத்திமா பதியிலும் தேவதாய் முன்பாக பல இரகசியங்களைத் தயாரித்து செபமாலையாக சிறுவர்கள் செபித்த செபம் "அருள் நிறை மரியே" என்னும் செபமாகும். எனவே அன்னையின் புகழை "அருள் நிறை மரியே வாழ்க!" என உச்சரித்து தனிப்பட்ட முறையிலும் குடும்பமாகவும் குழுவாகவும் செபமாலை செபித்து வானதூதரின் பேற்றைப் பெற்று மகிழ்வோம். அருள் மழையில் நனைவோம்.

காவலன் கலசம்

# மரண தண்டனை..

## முகவுரை

இலங்கை நாட்டின் இன்றைய பேசுபொருள் "மரண தண்டனை!" அண்மையில் இலங்கையின் சிறைச்சாலை ஒன்றில் அதன் உள்ளிருந்தே போதைப்பொருள் முகவர்கள் விசேட சலுகைகளுடன் போதைப்பொருள் விநியோகத்திலும் ஈடுபட்டது நாம் யாவரும் அறிந்த உண்மையே. இந்த உண்மை வெளிவந்ததும் சிறைச்சாலையில் இருந்த போதைப்பொருள் முகவர்களுக்கு மரண தண்டனை கொடுக்கவேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டதும் நாம் எல்லோரும் அறிந்த விடயமே. இது குறித்து மரண தண்டனைக்கு சார்பாக வும் எதிராகவும் பல கருத்துக்கள் எழுந்த வண்ணமாகவே இருக்கும். இவ்வேளை யில் நாமும் "மரண தண்டனை பற்றி கிறிஸ்தவ அறநெறிக் கண்ணோட்டத்தில் அலசி, ஆராய்ந் துபார்ப்போம்.

எந்தவொரு செயலுக்கும் கார ணம் இருக்க வேண்டும். காரணத் தோடு கூடவே நேர்தியான நோக்க மும் இருக்க வேண்டும். காரணமு மின்றி நோக்கமுமின்றி நாம் செய்யும் செயல்கள் தான்தோன்றித்தன மானவையே. குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பது நியதி. அதில் எவ்வித மாற்றுக் கருத்தும் எனக்கில்லை. ஆனால் வழங்கப்படும் தண்டனைகள், குற்றவாளிமட்டில் நாம் கொண்டிருக்கும் வெறுப்புணர்வின் வெளிப்பாடாக அமைந்துவிடக்கூடாது. அவ்வாறு அமையுமானால், வழங்கப்படும் தண்டனைகள் வெறும் பழிவாங்கும் செயல்களே.

**"பழிவாங்காதீர்கள்: அதைக் கடவுளின் சினத்திற்கு விட்டு விடுங்கள்..." பழி வாங்குவதும் , கைமாறு அளிப்பதும் எனக்குரியன என்கிறார் ஆண்டவர்..."**

(உரோ 12:19)

பழிவாங்கும் மனநிலை கிறிஸ்தவத்தின் பார்வையில் தீமையானதே.

தண்டனை வழங்குவது தவறு என்று நான் கூறவரவில்லை. குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் என்பதிலும் என்னிடம் மாற்றுக் கருத்தும் இல்லை. மாறாக தண்டனைகள் சீரிய நோக்கம் கொண்டமையாக இருக்கவேண்டும்: குற்றவாளிகள் சரியான முறையில் இனங்காணப்பட வேண்டும், குற்றத்தின் தன்மை கண்டுணரப்படவேண்டும், குற்றத்தின் தன்மையின் கனாகனத்தைப் பொறுத்து தண்டனைகள் வழங்கப்படவேண்டும். இங்கே, வழங்கப்படும் தண்டனை களுக்கு நோக்கம் இருக்க வேண்டும், என்பதே நியாயமான கருத்து. அத்துடன் வழங்கப்படும் தண்டனை "மரணம்" தான் என்றால் தண்டனை தன் நோக்கத்தைப் பூர்த்தி செய்துவிடுமா? என்பதும் ஓர் நியாயமான கேள்வியே.

### 1. தண்டனையும் அதன் இயல்பும்

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் அறிவு (Reoson) சித்தம் (Will ) என்கின்ற விடயங்கள் உண்டு. இயல் பாகவே மனிதனுக்குள் இருக்கும் சித்தம் (will) நன்மைத்தனத்தின் பால் நாட்டம் கொண்டிருக்கும். அதனால்தான் மனிதர்கள் அனைவரும் பொதுவாகவே நன்மையை விரும்பி தீமையை வெறுக்கும் இயல்பைக் கொண்டிருக்கின்றனர். அறிவானது (Reason) தன்மை எது, தீமை எது என்பதை பகுத்தாய்கிறது. சித்தமானது (Will) நன்மையை நாடுகிறது.

ஒவ்வொரு மனித குழுமத் திற்கும் (Human Community) பொது நன்மை (Common Good) என்கிற பொதுவான விடயம் ஒன்று உண்டு. எனவே அக்குழுமத்தின் அனைத்து செயற்பாடுகளும் இப்பொது நன்மையைக் கருத்திற் கொண்டே ஒழுங்கமைக்கப்படும். அதேபோல் அக்குழுமத்தில் காணப்படும் சட்டங்களும் ஒழுங்குகளும் (Low and order) அனைத்தும் பொது நன்மையைக் கருத்திற்கொண்டே ஏற்படுத்தப்படுகின்றன. எனவே பொது நன்மையைப் பாதிக்கும் எந்தவொரு செயற்பாடும், இயல்பாகவே அங்கு காணப்படும் சட்டங்களையும் ஒழுங்குகளையும் மீறிய செயற்பாடாகவே கருதப்படும். அதனையே நாம் குற்றச் செயல் (Crime) என்று கூறுகிறோம். குற்றம் தண்டனையைப் பிரசவிக்கிறது.

ஒவ்வொரு சமூகத்திலும் சிவில் அதிகாரங்கள் (Civil Authorities) இருக்கின்றன. இச்சிவில் அதிகாரங்களே அச்சமூகத்தின் கட்டுமானம் முழுவதிற் கும் பொறுப்பானவை. எனவே அச்சமூகத்தின் ஒழுங்குமுறைகள் மீறப்படும்போது, மீறுவோர் மீது இவ் சிவில் அதிகாரங்கள் நடவடிக்கை எடுக்க கடமைப்பட்டிருக்கின்றன. புனித தோமஸ் அக்குவைனஸ் கூறுவார் "நன்மை செய்யும்போது ஒருவனுக்கு வழங்கப்படும் கைமாறானது அவனை மேலும் மேலும் நன்மை செய்யத் தூண்டுவதுபோல, ஒருவன் குற்றம் செய்யும்போது வழங்கப்படும் தண்டனையானது அவனை மீண்டும் குற்றம் செய்ய விடாமல் தடுத்து நிறுத்தும் செயலாக அமைகிறது" (Summa Contra Gentiles). ஒட்டுமொத்தத்தில், சுருங்கக் கூறின், தண்டனை என்பது சமூகத்தின் நீதியைப் பாதுகாக்கும் ஒரு செயலே. இன்னுமொரு வகை யில் கூறுவதாயின் தண்டனை என்பது சமூகத்தில் காணப்படும் அநீதிகளை ஒழிப்பதற்கான ஒரு வழிமுறை யே. எனவேதான் குற்றவாளிகள் தண்டிக்கப் படவேண்டும் என்பதில் நியாயமுண்டு என்பது என் கருத்து: குற்றவாளிகள் தண்டனைக்குத் தகுதியுடையவரே.

அருட்பணி T.ரவிராஜ்

### 2. குற்றமும் தண்டனையும்

புனித தோமஸ் அக்குவைனஸ் தீமைகள் அனைத்தையும் இரு பிரிவு-களாகப் பிரித்துக் காட்டுகிறார். அவை யாவன: குற்றமும், தண்டனையும் ஆகும். ஒரு மனிதன் சுய விருப்புடன், சுயாதீனமாக, முழு அறிவுடன் தீமையை நாடிச் சென்று செய்யும் செயலே குற்றம் எனப்படுகிறது. எனவே குற்றம் என்பது ஒரு தீச்செயலே. தீமை என்பது நன்மையை நிராகரிக்கும் ஓர் செயல். ஆகவே குற்றமே தண்டனையைப் பிரசவிக்கிறது. இதனால் தண்டனையும் ஒரு வகையில் தீமையாகவே பார்க்கப் படுகிறது. ஏனென்றால் தண்டனையிலும் ஏதோ ஒரு வகையில் நன்மைகள் நிராகரிக்கப்படுகின்றன. உதாரணமாக ஒரு சிறைக் கைதிக்கு சுதந்திரம் என்கின்ற நன்மை மறுக்கப்படுகிறது என்பது அக்கைதியைப் பொறுத்தவரையில் ஒரு தீமையாகவே பார்க்கப்படுகிறது. ஆனால் இன்னும் ஒரு வகையில் தண்டனை என்பது ஒரு நன்மையாகவும் பார்க்கப்படுகிறது என்பதும் உண்மை. பொது நன்மையை (commuon good) கருத்தில் கொண்டு தண்டனை என்பது சமூகத்தின் நீதியை நிலைநாட்டி அச்சமூக வாழ் மனிதர்களை இயல்பு வாாழ்வு வாழ்வதற்கு வழிசமைக் கும் ஓர் செயலாகக் கருதும்போது தண் டனை என்பது ஓர் நற்செயலே.

### 3. தண்டனையின் நோக்கம்

முன்னுரையில் குறிப்பிட்டது போல தண்டனை என்பது வெறுப்பின் வெளிப்பாடோ அல்லது வழிவாங்கும் செயலோ அல்ல. மாறாக தண்டனை என்பதிலும் ஓர் நீதி நிலைநாட்டப்பட வேண்டும். தண்டனையும் தன்ன கத்தே நோக்கத்தைக் கொண்டுள்ளது. தண்டிக்கும் செயலானது தண்டிக்கும் நீதி (Retributive Justice) யின் படி ஒழுக வேண்டும். திருத்தந்தை ஜோண்பவுல் II எழுதிய சுற்றுமடலான வாழ்வின் நற்செய்தி (Evangelium Vitae) இலக்கம் 56 பின்வருமாறு கூறுகிறது: "செய்யப்பட்ட குற்றச் செயலினால் ஏற்படுத்தப்பட்ட சீரற்ற நிலையைச் சீர்ப்படுத்துவதே ஒவ்வொரு தண்டனையினதும் பிர-தான நோக்கமாகும்" (Ev 56). இக்கருத்தினையே கத்தோலிக்க திரு அவையின் மறைக்கல்வி ஏடானதும் இலக்கம் 2266 இல் கூறுகிறது. அதே வேளை அவ்வேடானது மேலும் இரு விடயங்களையும் தண்டனையின் நோக்கமாக இணைத்துக் கொள்கிறது. அவையாவன: குற்றச் செயலிலிருந்து சமூகத்தைப் பாதுகாப்பதும், குற்றம் புரிந்தவருக்கு மறுவாழ்வளிப்பதுமாகும். எனவே தண்டனை என்பது குற்றம் புரிந்த மனிதனையும், அதனால் பாதிக்கப்பட்ட சமூகத்தினையும் மறுசீரமைக்கும் ஒரு செயலே.

### 4. மரண தண்டனையும் திருஅவையின் படிப்பினையும்

மரண தண்டனை பற்றி நாம் பேசுகையில் மீண்டும் ஒரு முறை திருத்தந்தை ஜோண் பவுல் எழுதி "வாழ்வின் நற்செய்தி (Evangelium Vitae) என்னும் சுற்றுமடல் நாம் புரட்டிப் பார்க்கின்றபோது, இலக்கம் 56 இல் பின்வருமாறு நாம் காண்கிறோம்: **"இன்று சிவில் சமூகத்திலும் சரி, திருஅவைக்குள்ளும் சரி, காணப்படும் கருத்தானது, மரண தண்டனை வழங்கப்படுவது மிகவும் மட்டுப்படுத்தப்படவேண்டும் என்பது மாத்திரமல்ல, அதனிலும் மேலாக மரணதண்டனை என்பது முற்றுமுழுதாகவே இல்லாது ஒழிக்கப்படவேண்டும் என்பதாகும்".**


(EV56)

திருஅவையானது எப்போதும் வாழ்வின் கலாசாரத்தை (Culture of Life) ஊக்குவிப்பதோடு, அதை வளர்த்தெடுப்பதிலும் முன்னின்று உழைக்கின்றது என்பதை நாம் ஒரு போதும் மறந்துவிடக்கூடாது. திருஅவை யானது, கிறிஸ்துவின் மறையுடலாக, எப்போதுமே, வாழ்வின் செய்தியை உலகிற்கு எடுத்துரைக்கின்றது. கிறிஸ்து, தந்தையாம் இறைவனின் வாழ்வழிக்கும் வார்த்தை என்பதையும் நாம் நினைவிற் கொள்ளவேண்டும்.

**"ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன"** (யோவான் 6:68)

வாழ்வு என்பது இறைவனின் கொடை. அதைக் கொடுப்பதற்கும் பறிப்பதற்கும் நாம் யார்? மனித வாழ்வும் சாவும் இறைவனின் திட்டப்படி இடம்பெற வேண்டும். மா-றாக அவை மனிதனு டைய திட்டப்படி இடம்பெறுமாயின், அது மனித மாண்பிற்கு எப்போதும் குந்தகமாகவே அமையும். மரண தண்டனை பற்றிப பேசுகையில் கத்தோலிக்க திருஅவை யின் மறைக்கல்வி ஏடு இலக்கம் 2267 பின்பருமாறு கூறுகிறது.

"ஓர் வன்முறையாளரிடமிருந்து ஒரு சமூகத்தில் வாழும் மனித உயிர்களையும் அச்சமூகத்தின் பொது நன்மையையும் பாதுகாக்கும் ஒழுங்குமுறைகளையும் பாதுகாப்பதற்கு இரத்தம் சிந்தா வழிகள் இருப்பின்



அச்சமூகத்தினை ஆழ்பவர்கள் அவ்வழிமுறைகளை மட்டும் பயன்படுத்தி அச்சமூகத்தினைப் பாதுகாக்க வேண்டும். ஏனென்றால் அவ்வழிமுறைகளே எப்போதும் அச்சமூகத்தின் பொது நன்மையின் நிபந்தனைகளுக்கு உட்பட்டிருப்பதுடன், மனித மாண்பினை யும் பேணிக்காக்கின்றன: (CCC2267)

### 5. குற்றங்களைத் தடுப்பது எப்படி?

ஒரு சமூகத்தின் அல்லது பிரதேசத்தின் சீரான இயக்கத்திற்கு அச்சமூகத்தின் பொது நன்மையினைக் கருத்திற்கொண்டே அங்கே சட்டங்களும் ஒழுக்கங்களும் ஏற்படுத்தப்படுகின்றன. இச்சட்டங்களையும் ஒழுக்குகளையும் ( Law and Order) சரியான மு-றையில் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்கும் போது குற்றங்கள் இல்லாது ஒழிக்கப்படும் என்பது அனைவரும் அறிந்த உண்மை. ஆனால் எங்கள் நாட்டிலும், நாம் வாழும் சமூகத்திலும் இது நடைமுறையில் இருக்கின்றதா ? ஏன், நானும், நீங்கள் ஒவ்வொருவரும், சட்டங்களையும், ஒழுக்கங்களையும் சரியாகக் கடைப்பிடிக்கின்றோமா? உதாரண-மாக, நாங்கள் வீதிகளில் செல்லும்போது எங்களில் எத்தனை பேர் வீதி ஒழுங்குகளைச் சரியாகக் கடைப்பிடித்து வண்டிகளைச் செலுத்துகின்றோம். இங்கே வீதி ஒழுங்கை மீறுவதும், போதைப் பொருள் கட்டுவதும் ஒன்றா? என்ற கேள்வி உங்களுக்குள் எழலாம். சின்னச் சின்ன ஒழுங்கு மீறல்கள்தானே காலப்போக்கில் எம்மை ஒழுக்கமற்றவர்களாக மாற்றுகின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இது எனக்கும் உங்களுக்குமான தனிமனித மீளாய்வு சிந்தனைத்துளி.

2015ம் ஆண்டு யாழ் மாவட்ட செயலகத்தில் மது ஒழிப்பு வார இறுதி நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. அதில் உரையாற்றும் வாய்ப்பு ஒன்று எனக்குக் கிடைத்தது. அந்த உரையின்போது அங்கிருந்த அதிகாரிகள் முன் இரு விடயத்தைக் கூறி, அவர்கள் முன் இரண்டு வினாக்களையும் முன்வைத்தேன். அதாவது, 2013 ஆம் ஆண்டில் 27% இருந்த மதுபான சாலைகளின் எண்ணிக்கை 2015ம் ஆண்டில் 87% மாக உயர்ந்து விட்டது. இது முதாலாவது விடயம். இரண்டாவது யாழ் குடாநாட்டிற்குள் "கஞ்சா" போதைப் பொருள் கடல் மார்க்கமாக உள்ளே வருகிறது என்கிறார்கள். இங்கே எழும் வினாக்கள் என்னவென்றால், 27% மாக இருந்த மதுபானசாலைகள் 87% மாக உயர்ந்துள்ளது என்றால் யார் இவற்றிற்கு அனுமதி வழங்கியவர்கள்? கடல் மார்க்கமாக போதைப்பொருள் உள்ளே வருகின்றது என்றால், இப் பெரிய விடுதலைப் புலிகள் அமைப்பின் கடற் போக்குவரத்தைக் கட்டுப்படுத்திய அரசால் ஏன் இவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை? (தொடர்ச்சி 11ம் பக்கம்)
மரண தண்டனை....

# காவலன் கலசம்

# மனிதம்



சிறுகதை

ஒருமுறை ஒரு வயதான வயோதிபர் மிகவும் சோகத்துடனும் அழுகையுடனும் வைத்தியசாலை வாயிலில் நின்று கொண்டிருந்தார். பின்னர்தான் தெரிந்தது அவரது மகன் விபத்தில் சிக்குண்டு அவசர சிகிச்சைப் பிரிவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அந்த வயோதிபர் வைத்தியர்களை தனது மனதில் பட்டவாறெல்லாம் தகாத வார்த்தைகளால் திட்டிக் கொண்டிருந்தார். ஏனெனில் அக்கணம் வைத்தியர் எவரும் அந்த இடத்தில் இருக்கவில்லை.

சிறிது நேரம் கழித்து வைத்தியர் ஒருவர் ஓடி வந்தார். அவசரமாக வந்த வைத்தியரைப் பார்த்த அந்த வயோதிபர் "எனது மகன் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறான். நீர் உமது அலுவல்கள் எல்லாவற்றையும் ஆறுதலாக முடித்து விட்டு ஏனோதானோ என்று வருகிறீர். மக்கள் மீது கரிசனை இல்லாத நீரெல்லாம் எதற்கு வைத்தியரானீர்? எனது மகனின் உயிர் உமது கையில். அவனுக்கு ஏதாவது நடக்கக்கூடாது. நடந்தால் உம்மை நான் சும்மா விடமாட்டேன். உம்முடைய மகன் என்றால் இப்படி நடக்க விட்டிருப்பீரா? அல்லது இப்படி கரிசனை இல்லாது இருப்பீரா" என்று பேசினார். எல்லா மக்களும் இதனைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்த வைத்தியர் எதனையும் மறுமொழியாகக் கூறாது தனது அறைக்குள் சென்று விட்டார்.

சிறிது நேரம் சென்ற பின்னர் வைத்தியர் அந்த வயோதிபரிடம் வந்து "உம்முடைய மகனுக்கு உயிருக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. சிகிச்சை நல்லவிதமாக முடிந்தது" என்று கூறியவர் அவசர அவசரமாக சென்று விட்டார். வயோதிபர் மீண்டும் கோபம் கொண்டு " இந்த வைத்தியர்களே இப்படித்தான். ஏன் எதுக்கு என்று கூட கேட்க மாட்டினம்" என்று முணுமுணுத்தபடி அருகில் நின்ற ஒரு தாதியை அழைத்து "ஏன் பிள்ளை இவருக்கு என்ன அவசரமாம்? எனது மகனின் உடல்நிலை பற்றி எதுவும் கதைக்காம போறார்" என்றார். அப்போது அந்த தாதி கூறிய பதில் அந்த வயோதிபரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அந்தத் தாதி "ஐயா நேற்றுத்தான் இந்த வைத்தியரின் மகன் இறந்து போனவன். இன்று தான் அவரின் இறுதிச் சடங்கு. இறுதிச்சடங்கு நிகழ்வில் இருக்கும்போது தான் நாங்கள் போன் பண்ணி உமது மகனின் சிகிச்சைக்காக வரக் கூறினோம். அவரும் உடனே வந்து விட்டார். இப்போது போய்த்தான் தனது மகனுக்கு இறுதி அஞ்சலி செலுத்தப் போகிறார்" என்றார். வயோதிபர் வாயடைத்துப் போனார்.

இக்கதையில் மனிதநேயம் வைத்தியரிலா அல்லது வயோதிபரிலா?

**வாழ்வது ஒரு முறை**
**வாழ்த்தட்டும் தலைமுறை**

**ஸ்.ஸ்ரீபன்றாஜ்**
**திரு இருதய ஆண்டவர்**
**இடைநிலைக் குருமடம்**
**களுத்துறை**

## ஏமைச் சூழும் தீமைகளை...

கறைபடியாக் கன்னிகையே
கடவுள் தந்த பெருங்கொடையே
இறைவன் மகன் திருச்சுதனை
உவந்தளித்த பெட்டகமே
பெரும் கானகத்தின் நடுவினிலே
கோயில் கொண்டு எழுந்தருளி
கவலை. கண்ணீர் சுமந்துகொண்டு
நின் பதியைத் தேடி ஓடி வரும்
எம்மவர்க்கு அருள் புரிவாய்

போர்முடிந்து போனாலும்
போரின் வடு மறையவில்லை
சொந்த மண் மீட்பிற்கான
போராட்டம் ஓயவில்லை
காணாமல் போனவர்கள்
திரும்பி இன்னும் வரவேயில்லை
சிறைப்பட்டோர் வாழ்வினிலே
விடுதலையைக் காணவில்லை
போதைவஸ்து அடிமைத்தனம்
முடிவதாகத் தெரியவில்லை
வாள் வெட்டும் கொள்ளைகளும்
நடக்காத நாளேயில்லை
பாலகரைப் பாழ்படுத்தும்
வன்கொடுமை அழியவில்லை

இப்படி எத்தனையோ
வேதனைகள் எம் வாழ்வில்
அத்தனையும் தீர்த்து வைக்க
உன்னால் முடியுமம்மா
வஞ்சகமும் சூதும் கொண்ட
சாத்தானை வதம் செய்து
உன் அன்பு மக்களெமை
அருள் தந்து காத்தவளே
மடுத்தாயே! சமாதான இராக்கினியே!
தேரேறி வலம் வந்து
ஆசி தரும் நன்நாளில்
எமைச் சூழும் தீமைகளை
நின் அருளால் அழித்திடம்மா
நின் பரிந்துரையால் நாம் கண்ட
கானாவூர் இரசம் போல
நிலைவாழ்வை நாம் காண
எமக்காக வேண்டிடம்மா...

**இ.அ.அமலரட்னம்**

## "நீங்கள் என்னைப்போல் ஆகுங்கள் நான் உங்களைப் போல் ஆனேன் அல்லவா"

இயேசு இந்த உலகத்திலே
பாவிகளை தேடிச் சென்றார் என்று
படிக்கிறோம். அவருடைய அன்பின்
வெளிப்பாடே அன்று பார்வையற்றவன்
பார்வை பெற்றான். லாசர்
உயிர்பெற்றெழுந்தான்.
சமாரியப்பெண் அன்று
இயேசுவோடு பேசினாள். ஏழை
மீனவன் அன்று கிறிஸ்துவின்
அப்போஸ்தலனானான்.

பழைய ஏற்பாட்டிலே
இஸ்ராயேல் மக்களுடன் கடவுள்
தனது பராமரிப்பை காட்டினார்.
அவர்கள் பாவத்திற்குள்ளே வீழ்ந்து
கிடந்தபோதும் உயிரூட்டி, புத்தியும்
கொடுத்தார். பின் தன் ஒரே மகனை
பலியாக கொடுப்பதன் மூலமும் தன்
அன்பின் வெளிப்பாட்டைக் காட்டினார்.

கடவுளுடைய அன்பு
ஒருபோதும் முடிவுக்கு வருவதில்லை.
நாம் நம்பிக்கையற்ற மனிதர்களாக
வாழுகின்றபோதும் அவர் நம்பிக்கை
தந்து, கரம்பிடித்து வழிநடத்துகிற
கடவுளாக இருக்கிறார்.

ஆகவே கிறிஸ்தவ
ஒருமைப்பாடுகளை நாம்
கிறிஸ்தவர்கள் என்று
அறிக்கையிடுவதன் மூலம்
அடையாளப்படுத்தாமல் கடவுளின்
ஒரே மகனான இயேசு கொடுத்த
அன்பு என்ற கூரிய ஆயுதத்தின்
மூலம் எம் மத்தியில் எமது
அடையாளங்களை அறிக்கையிட
முயலவேண்டும்.

இன்றைய சமூக
பண்பாட்டிலே அன்பு என்கின்ற
அடையாளம். அடையாளம்
தெரியாமல் போய்க்கொண்டி
ருக்கின்றது. இதன் அடையாளத்தை
அடையாளப்படுத்துவது
கிறிஸ்தவர்களின் மட்டில் முக்கிய
பொறுப்பாகும். இயேசு
வழிகாட்டினார் என்பதை விட
இயேசு வாழ்ந்து காட்டினார்
என்பதே நாம் பின்பற்ற வேண்டிய
கருவாக கொள்ள வேண்டும்.

**ஞா.றொகான்**
**திருஇருதய ஆண்டவர்**
**இடைநிலைக் குருமடம்,**
**களுத்துறை.**

## சிந்திக்க ஓர் சித்திரம்




## இளையோர் காவியம் 11

நீ
கூடாத ஆளென்று
உன்னை கைகழுவி விட்டதா
சமூகம்
ஒருவர்
கைகழுவி விடவில்லை
அவர்தான் தொங்கிக் கொண்டிருக்கிறார்
சிலுவையில்

நீ
தெரிந்தும் தெரியாமலும் விழுந்த
பள்ளத்தாக்கிலிருந்து
எழு!
தவறுகள்
நீ புதைக்கப்பட்ட இடமல்ல
சறுக்கி விழுந்த இடம்

நீ பிழைகளை திருத்தும் போதுதான்
அழகாய் வரையப்படும்
ஓவியம்

நீ சும்மா சறுக்கி விளையாட
வாழ்க்கை சறுக்கு மரம் அல்ல!
சிற்பம் செதுக்குகிற
மரம்

உன் வாழ்க்கை பயிர்களிடையே
களைகளை முளைக்க வைப்பது
மர அணுக்களும்
தான்

நீ
குழந்தைகளின் மனசை நடு
பரம்பரையாய் முளைக்கும்
களைகளுக்கு கூட சாவு

உன்னால்
மீளமுடியாத
நினைவுகளுக்கு வைத்தியம்
ஆன்மீகம்

நீ கும்பிட்டுக்கொண்டிருக்கும் போதே
விடை வரும்
புனித அந்தோனியாரிடம் போ

நீ எங்கே வழிகளை மாறவிட்டாயோ
மீண்டும் அதே இடத்துக்கு
வா

நீ வழிமாறிப் போன ஆடு மட்டுமல்ல
வழிகள் மாற்றப்பட்ட
ஆடு

எல்லாம்
முடிந்ததென்று விரக்தி மர நிழலில்
நீ நிறுத்தக்கூடாது
வாழ்க்கை வாகனம்


உனக்கு
கிடைத்த அவமானங்கள்
சாதனைக்கு கிடைத்த
வருமானம்

(தொடரும்...)

**உயிரோவியன்**

## காவலன் கலசம்

# புனிதர்கள் வரிசையில் பேராயர் ஆஸ்கார் ரொமெரோ



சான் சால்வதோர் உயர் மறைமாவட்ட பேராயரான மேதகு ஆஸ்கார் ரொமெரோ ஆண்டகை 1917 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி எல்சால்வடோரின் சியுடாட் பரியோஸ் என்னும் இடத்தில் பிறந்தார். இவரது பெற்றோர் சான்தோஸ் ரொமெரோ, குவாதலூபே தெ ஜெசுஸ் கல்தாமெஸ் ஆவார்கள். இறைவன் மீது நம்பிக்கை கொண்ட இவர் குருத்துவத்தில் ஆர்வம் கொண்டு இறை மக்களுக்குப் பணிபுரியும் தாகத்தால் உந்தப்பட்டு, இறைவனது அழைப்பின் குரலொலி கேட்டு கத்தோலிக்க குருவாக 1942 ஆம் ஆண்டு ஏப்ரல் 04ம் திகதி திருநிலைப்படுத்தப்பட்டார்.

1970ம் ஆண்டு யூன் 21ம் திகதி ஆயராக திருப்பொழிவு பெற்று சான்தியாகோ தெ மரியா மறைமாவட்ட ஆயராகவும், சான் சல்வதோர் உயர் மறைமாவட்டத்தின் நான்காம் பேராயராகவும் திகழ்ந்தார்.

இவர் குருத்துவப் பணியில் இருந்தபோதே தன் நாடான எல்சால்வடோரில் நிலவிய வறுமை, சமூக ஏற்றத்தாழ்வு, சர்வாதிகார ஆட்சி, படுகொலைகள் மற்றும் சித்தரவதைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தார். குறிப்பாக தன் வாழ்வையும், பணியையும் மக்களுக்காக பணயம் வைத்து பணியாற்றினார். தன் ஞாயிறு மறையுரைகளை ஆன்மீக ஆயுதமாகவும் அரசிற்கான அறிவுரையாகவும், எச்சரிக்கையாகவும் பயன்படுத்தினார். தன்னைச் சுற்றி ஒரு அரச கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது, ஆயுதம் தாங்கியோர் தன்னை எப்போதும் மறைவாகப் பின்தொடர்கின்றனர், தனது மறையுரைகள் பதிவு செய்யப்பட்டு ஆய்வு செய்யப்படுகின்றன என அனைத்தையும் தெளிவாக அறிந்திருந்தும் அதனைப் பொருட்படுத்தாமல் இயேசுக் கிறிஸ்துவின் வழி ஒடுக்கப்பட்ட மக்களுக்காக போராடுவதே தன் இலட்சியம் எனக்கொண்டு, அதை வாழ்வாக்கி அவர்களுக்காக குரல் கொடுத்தார்.

1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் திகதி சுட்டுக்கொல்லப்படுவதற்கு முதல் நாள் அவரின் இறுதி மறையுரை ஆட்சியில் இருப்பவர்களை அதிர வைத்தது. அதுவே அவர்களை முடிவு ஒன்றைக் காணவேண்டும் எனவும் தூண்ட வைத்தது.

எல்சால்வடோர் நாடு மத்திய அமெரிக்காவில் உள்ள மிகவும் சனத்தொகை அடர்த்திமிக்க நாடாகும். 6.9 மில்லியன் மக்கள் இங்கு வாழ்கின்றனர். இதன்தலைநகரம்சான்சால்வடோர்ஆகும். இது மத்திய அமெரிக்காவின் இரண்டாவது மிகப்பெரிய நகரமாகும். இங்கு வாழும் பெரும்பான்மையான மக்கள் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றுகின்றனர். சொந்த நாட்டிலேயே மக்கள் அடக்குமுறைக்கும், அரச பயங்கரவாதத்திற்கும் உட்படுத்தப்பட்டார்கள். அரச படையினர் நகரங்களை மக்களை வதைக்கும் திறந்தவெளி சிறைச்சாலை ஆக்கினர். எங்கும் எதிலும் வன்முறையும், அரச பயங்கரவாதமும் நிலவிய நிலையில் பேராயர் அவர்கள் துணிந்து அவற்றை எதிர்த்ததுடன் அரச பயங்கரவாதத்தை எதிர்க்கும் பலமான தூணாக மக்கள் மத்தியில் தன்னை நிமிர்த்தினார்.

அவர் சுட்டுக்கொல்லப்படுவதற்கு முதல் நாள் அவர் ஆற்றிய இறுதி மறையுரையாக பின்வரும் மறையுரை அமைகிறது. "அரச படையினர், காவற்துறையினருக்கு நான் விடுக்கும் வேண்டுகோள்! அன்புச் சகோதரர்களே! நீங்கள் எங்களது உடன்பிறப்புக்கள். எங்களது இந்த மண்ணிலே குருதியிலே ஊறியவர்கள் யாரோ ஒருவர் பிறப்பிக்கும் கட்டளையை ஏற்று உங்களுடைய இனத்தவரையும், உறவினரையும் சித்திரவதை செய்கிறீர்கள். கொன்று குவிக்கிறீர்கள். உங்களைக் கொலை செய்யத் தூண்டும் இந்தச் சட்டம் இறைவனது கட்டளையை அவமதிக்கும் சட்டம். நீதியற்ற சட்டம். இறைவனின் சட்டத்தையும், மனித மாண்பையும் கட்டிக்காக்கும் திருச்சபை இந்த அநீதிக்கு எதிராக அமைதி யில் இருக்க முடியாது. எனவே நான் எச்சரிக்கை செய்கின்றேன். கடவுளின் பெயரால் வேதனையில்

> "என்னைக் கொன்றுவிட்டால் நான் மீண்டும் எல்சல்வடோர் மக்களிலே உயிர்த்தெழுவேன்"

துடிக்கும் மக்களின் பெயரால் ஒவ்வொரு நாளும் நெஞ்சைப் பிளந்துகொண்டு விண்ணை நோக்கி அழுகின்ற மக்களின் பெயரால் நான் கேட்கின்றேன். ஏழைகளைத் துன்புறுத்துவதை நிறுத்துங்கள், குற்றமற்றவரை சுட்டுக்கொல்வதை உடன் நிறுத்துங்கள்" இவ்வாறாக பேராயரின் மறையுரை அநீதிக்கு எதிரான பகிரங்க அறைகூவலாக அமைந்திருந்தது.

1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் திகதி திருச்சபை நடத்தும் புற்றுநோயாளிகளுக்கான இறை இரக்க மருத்துவமனையின் சிற்றாலயத்தில் பேராயர் ரொமெரோ திருப்பலி நிகழ்த்தினார். மேற்படி மறையுரையினை நிறைவு செய்த அவர், மறையுரை இடத்தைவிட்டு திருப்பலிப் பீடத்தை நோக்கி சில அடிகள் எடுத்து வைத்தார். ஒரு சிவப்பு நிற வண்டி சிற்றாலயத்திற்கு எதிரே நின்ற வளாகத்தில் நின்றது. வாகனத்திலிருந்து இறங்கிய துப்பாக்கி நபர்கள் சிற்றாலயத்தின் உள்ளே நுழைந்து பேராயரை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர். பேராயர் மண்ணில் சாய்ந்தார். தன் மக்களின் உரிமைக்காகப் போராடி மக்களுக்காக தன் உயிரையும் ஈந்தார். "தன் நண்பனுக்காக தன் உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு எவரிடமும் இல்லை" என்ற இயேசுவின் வார்த்தைகள் பேராயரின் வாழ்வில் வாழ்வாக்கப்பட்டது.

அவர் சுட்டுக்கொல்லப்பட்ட தினமான மார்ச் 24ம் திகதி மனித உரிமை மீறல்பற்றிய உண்மை அறியும்பன்னாட்டு தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது என்பது வரலாற்றில் கோடிடப்படவேண்டிய விடயமாகும்.

பேராயர் ரொமெரோ கிறிஸ்தவ மறை நம்பிக்கையின் பொருட்டு கொல்லப்பட்டாரா என்ற விவாதம் பல ஆண்டுகளாகத் தொடர்ந்தது. பெரும்பாலான மக்கள் அவர் கிறிஸ்தவ மறையின் நம்பிக்கையோடு இரண்டறக் கலந்த நீதி, சமாதானம், மனித உரிமை, பாதுகாப்பு, மனித உயிர் மேம்பாடு ஆகிய விழுமியங்களை உறுதியோடு பறைசாற்றி சர்வாதிகார அரசுக்கு சவால் விடுத்த ஒரு புனிதராகவே அவரைக் கருதினர்.

கத்தோலிக்க திருச்சபையின் தலைமைப்பீடம் இவ்விடயத்தில் சிறிது தயக்கம் காட்டியபோதும் 1997 ஆம் ஆண்டு திருத்தந்தை 2ம் ஜோண் போல் பேராயர் ரொமெரோவை இறையடியார் என அறிவித்ததுடன், அவரது புனிதர் பட்டமளிப்பு நிகழ்வுகளுக்கான நடைமுறைகளையும் தொடக்கி வைத்தார். புனிதர் பட்டத்திற்கான பணிகள் மீண்டும் திருத்தந்தை 16ம் பெனடிற் அவர்களால் 2012 ஆண்டு தொடக்கி வைக்கப்பட்டது.

பேராயர் ஒஸ்கார் ரொமெரோவைச் சுட்டுக்கொன்ற கொலையாளி யாரென்று அரசால் கண்டுபிடிக்க முடியாத நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரமளிக்கப்பட்ட உண்மை கண்டறியும் விசாரணைக் கமிசன், தீவிர வலதுசாரி அரசியல்வாதியும் மற்றும் கொலைப் பிரிவுத் தலைவருமான ராபர்டோ டி அபுய்கன் என்பவர் தான் இந்தப் படுகொலையை நிகழ்த்த உத்தரவிட்டதாக தனது அறிக்கையில் கூறியுள்ளது.

**அ.ஸ்ரெபான் றொக்சன்**
**யா/ புனித பத்திரிசியார் கல்லூரி**

எமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் "மறைசாட்சி" என்னும் சொல் எவ்வாறு புரிந்துகொள்ளப்படவேண்டும் என்பதை தான் திருத்தந்தை ஆனவுடன் விளக்கிக் கூறினார். எல்சல்வடோர் நாட்டில் பெரும்பான்மையானோர் கத்தோலிக்கராக இருந்தாலும், நாட்டில் ஏழைகளுக்கு எதிராக அநீதிகள் இழைத்து வந்த ஆட்சியாளர்கள் கத்தோலிக்கராக இருந்தாலும் ஆஸ்கார் ரொமெரோ கொல்லப்பட்டது கிறிஸ்தவ நற்செய்தி ஏழைகளுக்கு வாழ்வளிக்கவும் அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கவும் தூண்டுதலாக அமைந்துள்ளது என்பதை வலியுறுத்தி மறைசாட்சி ஆஸ்கார் ரொமெரோ அவர்களை அருளாளர் நிலைக்கு உயர்த்துவதாக அறிவித்தார்.

2015 ஆண்டு மே மாதம் 23 திகதி எல்சால்வடோரின் தலை நகரான சான்சால்வடோர் நகரின் மறை மாவட்ட ஆலயத்தில், "உலகத்தின் திருமீட்பர்" என்ற இயேசுவின் நினைவுச் சின்னம் அமைந்துள்ள உலக மீட்பர் வளாகத்தில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வில் மறைசாட்சி ரொமெரோ அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். புனிதர் பட்டமளிப்பு பேராயத்தின் தலைவரான கருதினால் ஆஞ்சலோ அமாத்தோ அவர்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்குப் பதிலாக நின்று இந் நிகழ்வை நடத்தினார். "அருளாளரான ரொமெரோ இன்றைக்கும் எதிரொலிக்கின்ற குரலாக இருக்கின்றார்" என திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சான்சால்வடோர் ஆயருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆயர் ரொமெரோ அவர்களுக்கு அருளாளர் பட்டம் வழங்கப்படுவது மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுப்பதாகவும், ரொமெரோ அன்பின் அடிப்படையில் அமைதியைக் கட்டியெழுப்பி, சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட மக்களின் உரிமைகளைக் காப்பதற்காக பாடுபட்டு, குரலற்ற மக்களின் குரலாக இறுதிவரை நிலைத்து நின்று கிறிஸ்தவ நம்பிக்கைக்கு சான்று பகர்ந்தார் என திருத்தந்தை தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அருளாளர் ரொமெரோவின் திருவிழா மார்ச் மாதம் 24ம் திகதி கொண்டாடப்படுகின்றது. எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 18ம் திகதி வத்திக்கான் புனித பேதுருவானவர் சதுக்கத்தில் புனிதர்கள் வரிசையில் அருளாளர் ரொமெரோ அவர்கள் திருத்தந்தையால் புனிதராக அறிவிக்கப்படவுள்ளார். வத்திக்கானில் அப்போஸ்தலிக்க மாளிகையில் வழிபாட்டுடன் ஆரம்பிக்க இருக்கும் இளையோர் பற்றிய உலக ஆயர்கள் மாமன்ற அமர்வில் அருளாளர் ஆஸ்கார் ரொமேரோ மற்றும் திருத்தந்தை 6ம் பவுல் ஆகியோருடன் மேலும் நான்கு அருளாளர்கள் புனிதர் நிலைக்கு உயர்த்தப்படுகின்றனர்.

அடக்குமுறைகளுக்கும், ஒடுக்குமுறைகளுக்கும் உட்பட்டு அநீதிகள் நிறைந்த, சவால்கள் நிறைந்த வாழ்வு வாழும் மக்களுக்கு அருளாளர் ரொமெரோ புனிதர் நிலைக்கு உயர்த்தப்படுவது மாபெரும் நற்செய்தியாகும்.

---

இயேசுவின் இறப்பு வரை சிலுவை என்பது துன்புறுத்தல், அவமானம் மற்றும் மரணத்தின் சின்னமாக விளங்கியது. இயேசுவின் இறப்பின் பின் சிலுவை நிலைவாழ்வின் சின்னமாகியது. அருள்தரும் பேரின்பத்தின் சின்னமாகியது. ஒளி யின் சின்னமாகியது. நல்லிணக்கத்தின் சின்னமாகியது. இவ்வுலகில் காணப்படும் பலவிதமான பல் கலாசாரங்களுக்கு உட்பட்ட சிலுவைகளைப் பற்றிய மறை அறிவையும், ஆன்மீக அறிவையும், அனுபவத்தையும் மையமாகக் கொண்டு பல்வேறு வகையான சிலுவைகளின் வடிவங்களையும் அவற்றிற்கான விளக்கங்களையும் காட்சிப்படுத்தியது மட்டுமன்றி, **சிலுவைகளின் சரித்திரம்** என்னும் நூலிலும் பதிவு செய்துள்ளேன்.

**அருட்பணி சிசில் ஜோய் பெரேரா, அதிபர், "தஹம் செவன" இடைநிலைக் குருமடம்,கழுத்துறை.**

## மோலின் சிலுவை

மோலின் சிலுவை என்ற சொல் லத்தீன் மொழியிலுள்ள "Molera" என்ற சொல்லிலிருந்தும், "Molimum" என்ற சொல்லிலிருந்தும் வந்தது. இதன் அர்த்தம் அரைத்தல் அல்லது அரைக்கும் ஆலை என்பதாகும். இச்சிலுவையின் அமைப்பு அரைக்கும் கல்லில் காணப்படும் இரும்புச் சட்டம் போல் உள்ளது. அவ்வப்போது இச்சிலுவை அரைக்கும் கல் சிலுவை அல்லது மில்லர் சிலுவை எனவும் அழைக்கப்படுகின்றது. முடிவுகளில் உள்ள வளைவு இன்னும் அதிகமாக வளைக்கப்படும்போது இந்த வடிவம் நங்கூரம் போல் அல்லது கொழுக்கி போல் மாறுவதால் இது நங்கூரச் சிலுவை எனவும் அழைக்கப்படுகின்றது.

இச்சிலுவை கொத்திக் (gothic) வடிவ அமைப்பில் காணப்படுகிறது. இது ஜேர்மனில் றைன் லாண்ட் பகுதியில் 13ம், 14ம் நூற்றாண்டுகளில் பிரசித்தி பெற்றிருந்தது. ஜேர்மனியில் இது கபெல் கெறுஸ் (gabelkreuz), மிஜ்ரிக்கர் குறுசுபிக்ஸ் (mystikerkruzifix), கபெல் குறுசிபிக்ஸ் (gabellcruzifix), சர்சேர்குறுஸ் (schacherkreuz), பெஸ்ட் குறுஸ் (pestkreuz) என அழைக்கப்படுகின்றது.

"எனது சீடராக வரவிரும்பும் எவரும் தன் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" – இயேசுக்கிறிஸ்து



## கூரைச் சிலுவை

பாதுகாப்பற்ற காலநிலை, கடுமையான மழை, பனி போன்றவற்றிலிருந்தான பாதுகாப்பு போன்ற நடைமுறை தேவைகளின் விளைவாக இச்சிலுவை உருவாக்கப்பட்டது. இதன் கூரை அல்லது முகடு சிலுவையைப் பாதுகாத்து, பல பாதகமான காலநிலைகளுக்கு ஈடுகொடுத்து மக்களுக்கு நம்பிக்கையையும் ஆறுதலையும் கொடுத்தது.

இச்சிலுவையின் அர்த்தம் பலவாறாக உள்ளது. இது திரித்துவச் சிலுவை எனவும் அழைக்கப்படுகிறது. இதனை குடும்பங்களில் விசுவாச ஒளியினை கொண்டு வரும் அடையாளமாகவும் குறிப்பிடலாம். சிலர் இதனை உயிர்த்த இயேசுவின் வெற்றுக்கல்லறை அடையாளம் எனவும் குறிப்பிடுவர். இருப்பினும் மற்றவர்கள் இதனை திருச்சபையின் பிரசன்னத்தின் அடையாளமாகவும், கிறிஸ்தவ குழுமத்தின் அடையாளமாகவும் பார்ப்பர். மற்றொரு விளக்கம் இது ஒரு அல்பா சிலுவை. "யாவும் கிறிஸ்துவில் அவரது சிலுவையில் தொங்குகிறது" என்பதைக் குறிக்கிறது. ஆனால் ஒமேகா இல்லை. ஏனெனில் முடிவு இன்னும் வரவில்லை.

# காவலன் கலசம்

## தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் 105 ஆவது அகவை நிறைவில் இக்கட்டுரை பிரசுரமாகின்றது

**02.08.1913 –02.08.2018**

# தனிநாயகம் தமிழின் நாயகம்

இ.இ.வசீகரன்
ஆசிரியர்

உலகின் மூத்த இனங்களில் தமிழினமும் ஒன்று. தம் மொழி, கலாசாரம், கல்வி எனப் பலவற்றாலும் பெருமை கொண்டது நம் தமிழினம். அண்மைக்காலமாக பல இன்னல்களைக் கடந்து மீண்டும் எம் சமூகம் எழுச்சியுறத் தொடங்கியுள்ளது. இதற்கு மத்தியில் பயிர்களுக்குள் களைகள் எழுவது போல ஆங்காங்கே சமூகச் சீரழிவுகள் விஸ்வரூபம் எடுத்து வருகின்றன. அவை களையப்படாது விட்டால் முப்பது ஆண்டுகாலப் போரை விட கொடூரமான பாதிப்புக்களை நாம் சந்தித்து எமது முகவரிகளை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகவேண்டியேற்படும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

தமிழ் செய்வதில் முதன்மை பெற்ற மண் எங்கள் மண். தமிழை வளர்த்த சான்றோர்கள் சாலவும் சிறந்து விளங்கிய மண் இந்த மண். இந்த மண்ணிலேதான் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் தமிழ்ப் பணி செய்து, தமிழாய் வாழ்ந்து, தமிழ்த் தூதாகி, தரணியெங்கும் தமிழைப் பறைசாற்றியவர். *“வீணாகப் பழங்கதை பேசுவதில் ஒரு மகிமை இல்லை, சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ்முழக்கம் கேட்கச் செய்வீர்”* என்ற மகாகவி பாரதியின் கனவை மெய்ப்படுத்திய வண்ணம் **“என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே”**, என்ற திருமூலரின் வாக்கை தன் வாழ்வின் மகுடமாகக் கொண்டு தமிழும், தமிழ்ப் பண்பாடும் மேலோங்க இறுதிவரை உரமேற்றி உழைத்து நின்றவர் தனிநாயகம் அடிகளார்.

> **“ தமிழ் பக்தியின் மொழி என்று நான் அடிக்கடி கூறி வருகின்றேன். ஏனெனில், தமிழில் உள்ள பக்தி இலக்கியங்களைப் போல அழகிலும் ஆழத்திலும் பரப்பிலும் இத்துணை இலக்கியம் வேறு எந்த மொழியிலும் இருப்பதாக நான் அறியேன் ”**

கத்தோலிக்க கிறிஸ்தவ துறவியாக தனது பணியை ஆரம்பித்த தனிநாயகம் அடிகள் உலக இன்பத்தைத் துறந்தாலும் தமிழ் இன்பத்தைத் துறக்கமுடியாது தமிழை முறைப்படி கற்றுத் தேர்ந்து தமிழ் வளர்க்கும், பரப்பும் தூதராகத் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. Tamil Culture (தமிழ்க் கலாசாரம்) என்ற ஆங்கில காலாண்டிதழை ஆரம்பித்து அதன் ஆசிரியராக 1951-1959 வரை இருந்தார். அதன் மூலம் அகில உலகத்திலுமுள்ள தமிழ், திராவிட ஆர்வலரை ஒன்று சேர்க்க முற்பட்டு பெரும் வெற்றியும் கண்டார். 1961 இல் சென்னையில் தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் (Academy of Tamil Culture) என்ற அமைப்பைத் தோற்றுவித்தார்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகளையும், நூல்களையும் எழுதி வெளியிட்டார். “தமிழ்த்தூது” என்ற நூல் அடங்கலாக மொத்தம் 137 நூல்களை எழுதினார்.

மலேசியாவில் பணி புரி



யும் காலத்தில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தோற்றுநர்களில் ஒருவராக இருந்து செயற்பட்டார். அதன் முதல் மாநாட்டினை 1966, ஏப்ரல் 16 - 23 திகதிகளில் மலேசிய அரசின் துணையோடு பிரம்மாண்டமான முறையில் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடத்தினார். பின்னர் சென்னையில் நடந்த இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

தனிநாயகம் அடிகளார் வீரத் துறவியாகவும் எம் மத்தியில் எழுந்து நிற்கின்றார். 1956 ஆம் ஆண்டு சிங்கள மொழிச் சட்டத்தை எதிர்த்து தமிழ் அரசியல் கட்சிகள் கொழும்பு காலி முகத்திடலில் அறப்போர் நடத்தியபோது அடிகளார் தாம் மதகுரு என்பதையும் பொருட்படுத்தாது, தமிழ் இரத்தம் ஓடும் மக்களோடு மக்களாக தன் தமிழ்த்தாய் மட்டில் தனயனுக்குள்ள பாசத்தை, பற்றைக் காட்ட அந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்கு கொண்டமை அவரை உலகத் தமிழினம் வீரத்துறவியாக பார்க்க வைத்தது.

இறைவன் எமக்கு இலவசமாக அளித்த அனைத்தையும் நன்றியுடன் ஏற்று, பெருமையுடன் மதித்து அவைகளின் வளர்ச்சிக்கு அடிகளார் பணி செய்தது மாத்திரமன்றி, தமிழ் மொழி கலை கலாசாரம், சர்வதேச கவனத்தையும் ஏற்று சர்வதேச ரீதியில் வளரவும், வளர்க்கப்படவும் தேவையான அமைப்புகளுக்கு அத்திவாரக் கற்களை நாட்டி வைத்தார்.

அடிகளார் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்தபோது கண்டி தமிழ்ப் பண்பாட்டுச் சங்கம் ஊடாக “நம் மொழி உரிமைகள்” என்னும் தலைப்பில் வெளியிட்ட நூலில் விடுதலையைத் தேடி வனாந்தரத்தில் நடந்த இஸ்ராயேலருக்கு மோயீசன் இறைவனின் 10 கற்பனையை முன்வைத்ததுபோல தமிழ் பேசும் இனத்தவருக்கு அடிகளார் பத்து வேண்டுகோள்களை தெளிவாக எழுதி வைத்தார். அந்த வேண்டுகோள்களை சரியான முறையில் ஜீரணித்து தமிழினம் பயணித்திருந்தால் எம் பாதையில் முட்களுக்குப் பதில் மலர்கள் மணம் பரப்பியிருக்கும். ஆனால் நாம் அதிலிருந்து தவறிவிட்டோம். தொடர்ந்தும் தவறிழைத்துக் கொண்டிருக்கின்றோம் என்பதே வெளிப்படையான உண்மை.

தனிநாயகம் அடிகளார் எல்லைகள் கடந்து தமிழ் செய்தார். “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற பரந்த உலக மனப்பான்மை, விருந்தோம்பல், பிறரன்பு, ஈகை, தனக்கென வாழா பிறருக்குரியாளன் என்னும் கோட்பாடு, “என்கடன் பணி செய்து கிடப்பதே”, “ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்”, மானம் என்றால் உயிரைக் கொடுத்துக் காப்பாற்றும் வேட்கை, மனத் தூய்மை, விடாது முயலல், “யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்ற நிகரற்ற மனநிலை, “உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்” என்னும் உயர்ந்த இலட்சியம், புறமுதுகில் புண்படா வீரச்சிறப்பு என்பன தமிழர் பண்பாட்டில் அரிய சில கோட்பாடுகள் என்த் **தமிழர் பண்பாடு** தொடர்பாக அடிகளார் எழுதிய கட்டுரைகளில் தமிழர் வாழ்வியலை தெளிவுபடக் காட்டி நின்றார்.

உலகத்தின் தலைசிறந்த வாழ்வியல் பாதையை கொண்டு வலம் வந்த தமிழினத்தின் இன்றைய நிலை “தாளம் தவறுமோ தறிபடுமோ” என்ற நிலையில் சென்றுகொண்டிருக்கின்றது. தமிழ் செய்த நவீன திருமூலரான தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளார் வழியில் தமிழ் செய்தல் என்ற சொல்லாட்சி கொண்டு தமிழ் மொழியையும், தமிழர் தம் வாழ்வியல் பண்பாடுகளையும் இன்று செயல்வடிவில் செப்பனிட முனைந்தால் குடதிசையில் சாயும் தமிழினம் குணதிசையில் நிமிர்வதற்கு வழிபிறக்கும்.

**தனிநாயகம் அடிகளாரின் வாழ்வையும், தமிழ்ப் பணியையும் தமிழர்கள் என்றும் நினைந்தேற்ற வேண்டும்.**

# இல்லறம் காப்போம் குடும்பம் சிறந்திட....

அருட்பணி சிங்கராயர் ஸ்ரீவன் (CMF)

குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வாரம் ஒருமுறையோ அல்லது மாதம் இரண்டு முறைகளோ தங்களுடைய வாழ்க்கையைப் பற்றி ஆழமாக கூடி சிந்திப்பது, மீட்டுப்பார்ப்பது, அனுபவத்தை பகிர்ந்து கொள்ளுதல், திட்டமிடுதல் ஒழுங்கமைத்துக் கொள்வது மிகவும் முக்கியமாகும். இதையே நாங்கள் குடும்ப நல்லாலோசனைக் கூட்டத்தில் செய்கின்றோம்.

1. குடும்ப கூட்டத்திற்காக குறிக்கப்பட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில் ஒன்று கூடுதல்.
2. செபத்துடன் ஆரம்பித்தல்.
3. குடும்பத்தில் ஒருவர் ஒருவருக்கு செய்திருக்கக் கூடிய நன்மைத்தனங்களைக் குறிப்பிட்டு பாராட்டி ஊக்குவித்தல்.
4. கடந்த வாரம் எங்களுடைய வாழ்க்கை எப்படி இருந்தது என்பதைப் பற்றி பகிர்ந்து கொள்ளுதல்.
5. இந்த வாரம் நாம் என்ன செய்யப் போகின்றோம் என்பது பற்றி சிந்தித்து திட்டமிடுதல்.
6. குடும்ப உறுப்பினரிடையே பகிரப்பட்ட பொறுப்புக்களை மீளாய்வு செய்தல்.
7.. புதிய பொறுப்புக்களை பகிர்ந்து கொள்ளுதல்.
8. குடும்பத்தின் தூரநோக்கை (Vision Statement) அனைவருக்கும் நினைவூட்டி அதை அடைவதற்கான அர்ப்பணத்தை வெளிப்படுத்துதல்.
8. நன்றிச் செபம் பாடலுடன் நிறைவு செய்தல்.

குடும்பக் கூட்டம் நடத்துவதால் ஏற்படும் நன்மைகள் ஏராளம். நாங்கள் அனைவரும் சேர்ந்து குடும்பமாக சிந்தித்து திட்டமிட்டு செயற்படுகின்ற பொழுது நிறைய நன்மைகளைப் பெறுகின்றோம். ஒற்றுமையே பலம் என்பதை குடும்ப உறவில் உணர்கின்றோம். குடும்ப முரண்பாடுகளை மூடிமறைக்காமல் தீர்வுகளைப் பெற்றுக் கொள்கின்றோம். ஒருவரையொருவர் ஆழமாகப் புரிந்து கொள்வதனால் அன்பினாலும் பாசத்தினாலும் இணைக்கப்படுகின்றோம். குடும்பத்தில் இருக்கும் ஒழுக்க விதிகளை கடைப்பிடிக்க தூண்டப்படுகின்றோம்.

குடும்பத்தை ஒரு குறிக்கோளின் அடிப்படையில் வாழத்தூண்டுகிறது. எமது பிள்ளைகள் சிறுவயது முதலே பொறுப்புக்களைப் பகிர்ந்து செவிமடுத்து வாழப் பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.

குடும்பக் கூட்டங்களை தொடர்ந்து செய்வதனால் குடும்பத்தில் ஆழமான புரிந்துணர்வு வளர்க்கப்பட்டு அன்பும், கருணையும் எமது உறவில் நிலைத்து நிற்க உதவுகிறது.

**குழுவாக செயற்பட தூண்டப்படுகின்றோம்**

தனித்தனியாக அல்லாமல் குழுவாக செயற்படத் தூண்டப்படுகின்றோம். தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்ய இது ஒரு நல்லதொரு கருவியாக அமைகின்றது. தனிமையைத் தவிர்க்க உதவுகிறது. கூடிவாழக் கற்றுக் கொள்கின்றோம். நாங்கள் அனைவரும் சேர்ந்து செயற்படுகின்றபொழுது வாழ்வின் மிக உயர்ந்த இலக்குகளை இலகுவில் அடையக் கூடியதாக இருக்கின்றது. இலக்குகளை அடைவதால் கிடைக்கும் நன்மைகள் ஏராளம், அதைப் பகிர்ந்து வாழ வாய்ப்புக் கிடைக்கின்றது. புரிந்துணர்வுடன் வாழ வழி செய்கின்றது.

வேகமாக நகர்ந்து கொண்டிருக்கும் உலகப் போக்கில் ஒருவரையொருவர் சந்திக்க, செவிமடுக்க, ஊக்குவிக்க நேரமில்லாமல் தவிக்கின்றோம். இப்படியாக ஒரு பயிற்சியை நாங்கள் எங்களுடைய குடும்பத்திலே செய்கின்ற பொழுது ஒருவருக்கொருவர் தரமான நேரத்தை ஒதுக்கி பாசப் பரிமாற்றத்தை ஊக்குவித்து அன்பை மையமாகக் கொண்டு வாழ-வழி ஏற்படுகின்றது.

**வளர்ச்சி**

ஏனோதானோ என்ற மனநிலை கள், அலட்சியப் போக்குகள், ஊதாரித்தனமான வாழ்க்கை முறைகள், முரண்பாடுகளைக் களைந்து ஆழமான புரிந்துணர்வோடும், ஒருவரோடு ஒருவர் பாசத்தோடும் வாழ குடும்பக் கூட்டங்கள் வழி செய்கின்றது.

# நம்பிக்கைக் கோபுரம்



நம்பிக்கையை அடித்தளமாக்கி, நற்பண்புகளைத் தூண்களாக்கி, தைரியத்தை சுவராக்கி, கனவுகளைக் கூரையாக்குவோம். மெல்லக் கட்டினாலும் சூறாவளிகளையும் சந்தித்து, விடைகொடுத்து அனுப்பும் உறுதி நிறைந்த கோபுரமாக வாழ்வை அமைப்போம். தலையெழுத்து என்று தகாத அறியாமையிடம் தஞ்சம் தேடிக்கொள்வதை விடுத்து, தொட்டுவிடும் தூரம்தான் உச்சியென்று பிரமிப்பாய் வாழ்வோம். எல்லை தெரிபவனுக்கு தொல்லைகள் பெரிதல்ல. நமது ஏணிகளை கூரையை நோக்கியல்ல; வானத்தை நோக்கி அமைப்போம்!

# புனித வின்சென் டி போல்
# அருங்கொடையின் 400 ஆண்டு நிறைவு விழா

## முகவுரை

உலகில் 150 இற்கும் மேற்பட்ட நாடுகளில் ஆன்மீக, பிறரன்புப்பணிபுரியும் புனித வின்சென் டி போல் சபைகள் இன்றும் தோற்றுப்போகாமல் இறையாட்சியின் முக்கிய பண்பாக இருக்கின்ற இரக்கம் என்னும் பண்பை முதன்மைப்படுத்தி, அழிந்துபோகாமல் வளருகின்றது என்றால் மூவொரு இறைவனின் அளவிட முடியாத அருங்கொடையே காரமாகும். மூவொரு இறைவன் காலத்துக்குக் காலம் தனது திருமறையை உயிரோட்டமுள்ளதாக மாற்றி இறையரசை நிறுவுவதற்காக பல் வேறுவிதமான அருங்கொடைகளை தான் விரும்புகின்ற, தெரிவு செய்கின்ற சாதாரண மனிதர்கள் மீது அபரிமிதமாகப் பொழிந்து அவருடைய உள்ளத்தில் தூண்டுதலைக் கொடுக்கின்றார். அந்த வகையில் 1617 ஆண்டு புனித வின்சென் டி போல் என்னும் புனிதருக்குக் கொடுக்கப்பட்ட உன்னத அருங்கொடையின் வல்லமையே புனித வின்சென் டி போல் சபையின் தோற்றத்திற்குக் காரணமாக அமைந்தது. இந்த அருங்கொடையின் 400 வது ஆண்டு நிறைவு விழா கடந்த 21.07.2019 அன்று நீர்கொழும்பு சீதுவையில் அமைந்துள்ள புனித தோமஸ் சர்வதேச கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வுகள் அனைத்தும் கத்தோலிக்க தேசிய ஆணைக்குழுவின் அனுசரணையில் புனித வின்சென் டி போல் தேசிய சபையின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்றது. இதில்கலந்துகொண்டபலரோடுகலந்துரையாடி அவர்களிடம் பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் அந்நிகழ்வைப் பற்றி இவ்வாக்கம் பேசுகின்றது.

## அருங்கொடையின் வெளிப்பாடு

1581 ஆம் ஆண்டு பிறந்த புனித வின்சென் டி போல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட பின் பங்குக் குருவாகப் பணியாற்றுகின்றார். அப் பங்கிலே மிகவும் வறிய நிலையில் வாடுகின்ற ஒரு குடும்பத்தைப் பற்றிய தகவல் அவருக்கு வழங்கப்படுகின்றது. இதைப்பற்றி பங்கு மக்களுக்கு மறையுரையில் தெரிவித்து உதவி கோருகின்றார். திருப்பலி நிறைவுற்றபின் பல குடும்பங்களுக்குக் கொடுக்கக்கூடிய உணவுப் பொருட்களும், ஏனைய பொருட்களும்அவருக்குக்கிடைக்கின்றன. அந்தக் குடும்பத்திற்குத் தாராளமாக உதவி செய்தது மட்டுமல்லாமல், இவ்வாறு இருப்பவர்களிடமிருந்து சேகரித்து இல்லாதவர்களுக்குக் கொடுக்கலாம் என்ற எண்ணம் அவருக்குத் தோன்ற இறைவனின் அருங்கொடையின் வெளிப்பாடாக 'வண்டி உணவு தர்ம சபையை ஆரம்பிக்கின்றார்' இதுவே வின்சென்ரியன் அருங்கொடையின் ஆரம்பமாகும்.

## திருப்பலியோடு ஆரம்பம்

அனுராதபுர மறை மாவட்ட ஆயரும், இலங்கைத் திருச்சபையின் பொதுநிலையினர் ஆணைக்குழுவுக்குப் பொறுப்பாக இருக்கும் மேதகு நோபேட் அன்றாடி ஆண்டகை தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதுஅவரோடு இணைந்து இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதியும் புனித வின்சென் டி போல் தேசிய சபையின் இயக்குநர் தந்தை அருட்பணி றோய் கிளரன்ஸ் அடிகளும் மற்றும் மறை மாவட்ட இயக்குனர் தந்தைகளும் திருப்பலியில் பங்கேற்றனர். இலங்கையின் எல்லா மறைமாவட்டங்களிலும் இருந்து வருகை தந்த புனித வின்சென் டி போல் உறுப்பினர்களும் இதில் கலந்துகொண்டமை ஒரு சிறப்பம்சமாகும். திருப்பலியைத் தொடர்ந்து தேசிய சபைக்கொடி மற்றும் மறைமாவட்டக் கொடிகளைத் தாங்கியவாறு தேசிய சபை உறுப்பினர்களும் மறைமாவட்டம் சார்பில் கலந்துகொண்டவர்களும் மண்டபத்தை நோக்கிப் பவனியாகச் சென்றனர்.



## மண்டப நிகழ்வுகள்

தொடர்ந்து ஏனைய நிகழ்வுகள் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன. வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து அதிதிகளும் மறைமாவட்ட இயக்குநர் தந்தையர்களும் மங்கல விளக்கேற்றினர். புனித வின்சென் டி போல் தேசிய சபைத் தலைவி சகோதரி விசாஹா வெலிவிற்ற வரவேற்புரையை வழங்கினார். மேதகு நோபேட் அன்றாடி ஆண்டகை ஆசியுரை வழங்குகையில் "400 ஆண்டு என்பது இறைவனின் மாபெரும் அருங்கொடையாகும்". இச்சபையின் வளர்ச்சியும் பணிகளும் பாராட்டப்பட வேண்டும் என்றும் கூறியதோடு, புனித வின்சென் டி போலிடம் காணப்பட்ட இவ் உன்னதமான அருங்கொடை ஒவ்வொரு வின்சென்ரியன் உள்ளத்திலும் பொழியப்பட்டிருப்பதால் புனித வின்சென் டி போலின் வழிநின்று சபை சார்ந்த பணிகளை ஆற்றவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

## தேசிய இயக்குநரின் செய்தி

கடந்த சில வருடங்கள் தேசிய சபையின் ஆன்ம இயக்குநராகப் பணி புரிந்த அருட்பணி லியோ பெரேரா அடிகளாரின் வழியில் தேசிய சபையின் இயக்குநராக அருட்பணி றோய் கிள ரன்ஸ் அடிகள் பணியாற்றுகின்றார். அவர் தமது உரையில் "400 வருட நிறைவுக்காக நன்றிகூறும் நாம் அருளாளர் பிரெட்றிக் ஓசானம் என்னும் 18 வயது இளைஞனால் ஆரம்பிக்கப்பட்ட புனித வின்சென் டி போல் சபை இன்று உலகில் 150 இற்கும் மேற்பட்ட நாடுகளில் பணியாற்றுவதைப் பார்க்கும் போது இறைவனின் அருங்கொடைகளை எண்ணி உள்ளத்தின் ஆழத்திலிருந்து இறைவனுக்கு நன்றி கூறவேண்டும் என்றும் எமது மக்களுக்கு நாம் என்ன மனநிலையில் பணிபுரிகின்றோம் என்று மீட்டிப்பார்ப்பதோடு மக்களோடு மக்களாக இருந்து கிறிஸ்துவின் பரிவிரக்கக் குணத்தோடு தியாக மனத்தோடு எமது நேரங்களைச் செலவிட வேண்டும்" என்றும் கூறி வாழ்த்துக்களையும், ஆசிகளையும் வழங்கிநின்றார்.

## நடன நிகழ்வும் நூல் வெளியீடும்

பாடசாலை மாணவிகள் வழங்கிய இரண்டு நடன நிகழ்வுகள் கண்ணுக்கு விருந்தாக அமைந்திருந்தன. அத்துடன் 400 ஆவது ஆண்டு நிறைவு நினைவு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. இம்மலரை ஆயர் மேதகு நோபேட் அன்றாடி ஆண்டகை அவர்கள் வெளியிட்டு வைத்தார். இந்நிகழ்வுக்கு சிறப்பாக அழைக்கப்பட்டவர்களுக்கும் மற்றும் ஒவ்வொரு மறைமாவட்ட புனித வின்சென் டி போல் ஆன்ம இயக்குநர் தந்தையர்களுக்கும் சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன.

## பரிசு வழங்கலும் கௌரவிப்பும்

400வது ஆண்டு நிறைவு நிகழ்வை முன்னிட்டு மறையாசிரியர்கள் ஊடாகமாணவர்களிடையே இரண்டு பிரிவுகளாக சித்திரப்போட்டி நடாத்தப்பட்டது. இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மேதகு ஆயர் அவர்கள் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். கடந்த காலங்களில் கொழும்பு தேசிய சபையின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்களாகப் பணி புரிந்தவர்களும் தற்போது மறைமாவட்ட சபைகளின் தலைவர்களாக இருப்பவர்களும் கௌரவிக்கப்பட்டு பெருமைப்படுத்தப்பட்டமை சிறப்பு நிகழ்வாக அமைந்திருந்தது. அத்துடன் சிறப்பாகப் பணிபுரிய வேண்டும் என்ற ஆர்வத்தை அனைவரின் உள்ளங்களிலும் ஏற்படுத்தியது. முன்னாள் தேசிய சபையின் ஆன்ம இயக்குநர் அருட்பணி லியோ பெரேரா அடிகளின் உரையைத் தொடர்ந்து தேசிய சபையின் செயலாளரால் நன்றியுரை வழங்கப்பட்டது. இறுதியில் தேசிய கீதத்தோடு நிகழ்வுகள் நிறைவடைந்தன. யாழ் மறைமாவட்ட மத்திய சபையின் ஒழுங்குபடுத்தலில் ஒவ்வொரு பந்தியின் உறுப்பினர்களாக ஒன்றிணைந்து ஆன்ம ஆலோசகர் அருட்பணி R.C.X.நேசராஜாவோடு மத்திய சபையின் தலைவியின் தலைமையில் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## நிறைவாக

புனித வின்சென் டி போலுக்கு இறைவன் கொடுத்த இரக்கப் பணிகளுக்கான இவ் அருங்கொடை எமது திருச்சபையின் இரக்கப் பணிகளை வளர்த்தெடுக்க உறுதுணையாக உள்ளது. எனவே எமது இலங்கைத் திருச்சபைக்கும் விசேட விதமாக எமது மறைமாவட்டத்தின் நூற்றாண்டுகளைக் கடந்து பணி புரியும் அனைத்து வின்சென் டி போல் சபைகளுக்கும் நிறைவான அருங்கொடைகளைக்கொடுக்கவேண்டும்என்று மன்றாடுவோம். அத்துடன் சபையின் உறுப்பினர்கள் கிறிஸ்துவின் வழி நின்று புனித வின்சென் டி போலின் பாதச் சுவட்டைப் பின்பற்றி, சிறப்பாகப் பணிபுரிய இறையருள் வேண்டுவோம்.

## நீ எதைக்கொண்டு அழைக்கப்படுகிறாய்?

"மனமாற்றத்தின் புனிதனாக வேண்டியவன் தன்னைத் தீர்ப்பிட இறைவன் இருப்பதை மறந்து தானே அப்பொறுப்பை எடுத்தால் மரணிக்கின்றான் துரோகியாக"

உலகில் அதிக மக்களால் உபயோகிக்கப்படும் ஒரு நூல் அகராதி. இந்நூலில் திருச்சபையின் தலைவராக்கப்பட்ட பேதுருவின் பெயரோ, இயேசுவால் அதிகம் அன்பு செய்யப்பட்ட யோவானின் பெயரோ குறிப்பிடப்படவில்லை. ஆனால், "நண்பனை காட்டிக்கொடுப்பவன்" என்ற கருத்தில் யூதாஸ் இடம்பெறுகிறான். நல்லவனுக்கு கிடைக்காத பெயர் ஒரு துரோகிக்கு கொடுக்கப்படுகிறது.

நண்பன் ஒருவன் தன் நண்பனுக்கு எதிராக புரியக்கூடிய பெரிய குற்றம் அவனைகாட்டிக்கொடுத்தல் ஆயினும்இன்றுவரலாற்றுக்கே அலுத்துப்போன வார்த்தை "காட்டிக்கொடுப்பு". ஆனால் அவ்வார்த்தைக்கு மறு கருத்து "யூதாஸ்" என்கிறது அகராதி.

இதில் நாம் கண்ட பாடம் என்னவெனில், நாம் சிறியதாக நினைத்துச் செய்யும் ஒவ்வொன்றும் எமது பெயருக்கு மாற்றீடாகிவிடும். இது அனைவருக்கும் பொருந்தும் என நான் எண்ணுகின்றேன். நீ அடுத்தவனின் தனித்துவத்தை அடையாளப்படுத்தாமல் அவனுக்கு மறுபெயர் அளிக்கும் போது நீ சமூகத்தில் எப்படி அழைக்கப்படுகிறாய் என சிந்தி. ஏனெனில் உன் பெயரும் விரைவில் அகராதியில் வந்துவிடலாம்...... !
உலகம் மாறிவிட்டது, கவனம்.....!

ஜே.ஜே.எமில்ரன்
திரு இருதய ஆண்டவர் இடைநிலைக் குருமடம்,
கருத்துறை

## வறுமை வேண்டாம்

வறுமை நீக்கி
வெறுமை நீக்கி
வறட்சி நீக்கி
வளர்ச்சி நல்கி
வளமாக்கி
வசந்தமாக்கி
வரம் அருள்வாய்
என் இறைவா.

அருள் இல்லா வறுமை
பொருள் இல்லா வறுமை
எதுவும் வராமல்
எனக்குரியதை அருள்வாய்
என் தலைவா
உணவில்லா வறுமை
உடையில்லா வறுமை
உறையுள் இல்லா வறுமை

இதிலும் கொடியது
வாழ்வில் வலி தரும்
ஆன்மீக வறுமை -
ஆன்மீக வெறுமை
அன்பு தராத வறுமை
அன்பு தராத வெறுமை
அரவணைக்காத வறுமை -
ஆதரவற்ற வறுமை -
இன்முகம் காட்டா வறுமை -
இன்முகம் காட்டா வெறுமை,
உற்சாகம் தராத வறுமை -
உற்சாகம் தராத வெறுமை,
ஊக்கம் தராத வறுமை -
ஊக்கம் தராத வெறுமை,
ஐக்கியமில்லா வறுமை -
ஐக்கியமில்லா- வெறுமை,
ஒற்றுமையில்லா வறுமை -
ஒற்றுமையில்லா வெறுமை.

அனைத்து
வறுமையும் நீக்கி -
வெறுமையும் நீக்கி -
வரம் தருவாய்
என் இறைவா.
ஆன்ம வறுமை,
ஆன்ம வெறுமை நீக்கி
ஆன்ம - பசி - தாகம்
தீர்ப்பாய் என் தலைவா.
அருள் வறுமை நீங்கினால்,
பொருள் வறுமை நீங்குமே
என் தலைவா.
பஞ்சம் நீக்குவாய் என் இறைவா.
இலஞ்சம் வாங்காத,
நெஞ்சம் தருவாய்
என் தலைவா.
ஊழல் இல்லா
உள்ளத்தை என்னில்
உருவாக்குவாய்
என் இறைவா.



# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை

## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**செமேரியா அ.ம.தி. அடிகளுக்கும், கோவா ஒரட்டோரியன் சபைக் குருக்களுக்குமிடையிலான உறவு நிலை**

இவர் மன்னார்-மாதோட்டத்தில் குறிப்பாகப் பறப்பாங்கண்டலில் இருந்த வண்ணம் பிரிவினையை மேலும் நீடிக்க முனைப்புடன் செயற்பட்டமை பற்றியும் முன்னர் பார்த்தோம். இந்த கோவாப்பிரிவினை மோசமடைந்து புதிய பரிமாணங்களுடன் யாழ் திருத்தூது மாவட்டத்தின் பல்வேறு இடங்களுக்கும் பரவியதால் ஆயர் பெற்றக்கீனியும் அவரது குருமுதல்வர் செமேரியா அடிகளும் பல சிக்கல்களை எதிர்கொண்டனர் என்றும் பார்த்தோம். ஆயினும் படிப்படியாக ஆயர் பெற்றக்கீனியின் தலைமையிலும், அமல மரித்தியாகிகள் சபைக்குருக்களின் அர்ப்பணிப்பான பணியாலும் சிறிது சிறிதாக பிரிவினைவாதக் குருக்கள் பக்கம் இருந்த மக்களையும், குழப்ப நிலையிலிருந்த மக்களையும் ரோமைத்தலைமைப்பீடத்தை ஏற்று அங்கீகரிக்கும் திருஅவை பக்கம் கொண்டு வரக்கூடியிருந்தமை ஆயர் பெற்றக்கீனிக்கும், செமேரியா அடிகளுக்கும் ஆறுதலைக் கொடுத்திருக்கவேண்டும். அத்துடன் 1850ம் ஆண்டிலிருந்து அவ்வப்போது கொலரா நோய் யாழ்ப்பாணத்தில் பரவி பலரைக் காவு கொண்டு மக்களை அச்சத்திற்குள்ளாக்கியது. இந்நோய் பரவியபோது நோய்கண்ட பிரிவினைவாதக் குருக்களுக்காதரவான பலர் செமேரியா அடிகள் மற்றும் ஐரோப்பிய, குறிப்பாக அவர்களுள் கூடுதலாகவிருந்த அமல மரித்தியாகிகள் சபைக் குருக்களின் அர்ப்பணிப்பான பணியினால் ஈர்க்கப்பட்டனர். கொலரா நோய் பரவிய காலத்தில் அமலமரித்தியாகிகள் சபைக்குருக்கள் முழுமையாகக் களத்தில் இறங்கி மக்களைப் பராமரிப்பதில் ஈடுபட்டு வந்தமையால் அவர்களுள் சிலரும் கொலராத் தாக்கத்திற்கும், வேறு நோய்களுக்கும் உள்ளாகித் தமது இளம் வயதிலேயே இறக்க வேண்டியேற்பட்டது. இவ்வாறாக 1851ம் ஆண்டு பிரான்சிஸ் லெய்டியர் (30 வயது) அ.ம.தி. வடமராட்சி, வதிரியில் கொலராத்தாக்கத்துக்குள்ளாகி இறைவனடி சேர்ந்தார். (இவரது உடல் வதிரி, புனித அந்தோனியார் ஆலய வளாகத்திலேயே அடக்கம் பண்ணப்பட்டுள்ளது. நினைவுக்கல் ஒன்றை இன்றும் காணலாம்). பின்னர் மன்னார்-மாதோட்டத்தில் பணியாற்றிய சியாமின் (Ciamin) அ.ம.தி. (33 வயது) நோய்த் தாக்கத்திற்குள்ளாகி 1853ல் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டு சில நாட்களில் இறந்தார் 1855ல் மாதகலில் லக்கோம்ப் (Lacombe) (28 வயது) அடிகளும் கொலராவுக்குப் பலியானார். கொலரா நோய் பரவிய இக்காலத்தில் அமலமரித்தியாகிகள் குருக்கள் மக்கள் பணியில் உயிர்த்தியாகம் போன்ற அர்ப்பணிப்பு நிறைந்த பணியினால் கணிசமான பிரிவினைவாதக் குருக்களை ஆதரித்த மக்கள் திரும்பவும் ஆயர் செமேரியாவைத் தலைமை ஆயராக்கொண்ட திருஅவைக்கு தமது அமைச்சலையும் பிரமாணிக்கத்தையும் வெளிப்படுத்தி வந்தாலும், ஆயர் செமேரியாவின் நிர்வாகக் காலம் முழுவதும் பிரிவினைப் பிரச்சினை குறைந்திருந்தாலும் தொடர்ந்து யாழ் திருத்தூது மாவட்டத்தையும் ஒரு முள் போலத் தைத்த வண்ணமேயிருந்தது. ஆங்காங்கே சில இடங்களில் குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பது போல பங்குகளில் பிரச்சினைகள் ஏற்படும்போது, பங்குத்தந்தைக்கும் பங்கு மக்களுக்கும் புரிந்துணர்வின்மை அல்லது வேறு சிக்கல்கள் ஏற்படும் போது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பிரிவினைக்குருக்கள் வந்து நிலைகொள்ள முயல்வது போன்ற சம்பவங்கள் இடம் பெற்றன. 1850ம் ஆண்டு ஊர்காவற்துறையில் பங்குத்தந்தைக்கும் பங்கு மக்களுக்குமிடையே சில பிரச்சினைகளேற்பட்டன. இப்புரிந்துணர்வின்மைக்குச் சரியான காரணம் என்னவென்று தெளிவில்லாவிட்டாலும். பங்குக் குருவுக்கெதிராகக் கிளர்ச்சி செய்த சிலர்

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

பிரான்சிஸ்கோ ஜோவாவோ (Francisco Joao) என்ற பிரிவினை வாதக்குருவை தம்மிடையே வந்து தங்குமாறு கோரினர். இந்தக்குருவும் உண்மையில் ஒரு பெரிய குழுக் கிறிஸ்தவர்களைத் தாம் பொறுப்பேற்கவுள்ளதாக எண்ணினார். கடைசியில் 1851ல் இவர் ஊர்காவற்துறையில் வந்திறங்கியபோது இவருக்கு நல்ல வரவேற்புக்காத்திருக்கவில்லை. அப்போது ஊர்காவற்துறையில் பங்குத்தந்தையாகவிருந்த லவுரென்ற் (Laurent) யே.ச. அறைவீட்டை விட்டகலவுமில்லை, பெரும்பான்மையான கத்தோலிக்கரும் பிரிவினைவாதக் குருவுடன் ஒரு தொடர்பையும் ஏற்படுத்த முன்வரவுமில்லை. ஏறக்குறைய 90 பேர் மட்டும் இவரை வரவேற்று புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஒரு இருப்பிடத்தை ஏற்படுத்திக் கொடுத்தனர். பிரிவினைக் குருவாகிய பிரான்சிஸ்கோ யோவாவோ ஆங்காங்கே உள்ள ஆலயங்களின் மூப்பர்களை வரவழைத்துத் தமக்கு ஆதரவு திரட்ட முயன்றார். அதேவேளையில் ஊர்காவற்துறை மறைத்தளத்திற்குப் பொறுப்பான லவுறென்ற் யே.ச. அடிகள் ஆயர் பெற்றக்கீனியினால் அனுப்பப்பட்ட குருவின் உத்தரவின்றி பிரிவினைக்குருவாகிய பிரான்சிஸ்கோ ஜோவாவோ அடிகள் எந்த் ஆலயத்திற்குள்ளும் நுழைவதிலிருந்து நீதிமன்றத் தடையுத்தரவு ஒன்றைப் பெற்றுக் கொண்டார். இதே குருவானவர் வேறு இடங்களிலும் யாழ் அடைக்கல மாதா கோவில், பாஷையூர் ஆகிய இடங்களிலும், 1852-1855 காலப்பகுதியில் வடமராட்சி கரவெட்டியிலும்பிரச்சினைகள்ஏற்படுத்தியிருந்தமை பற்றி முன்னர் பார்த்தோம்.

(தொடரும்.....)

---

# இயற்கையின் நிறைவில் இறைவன் இருப்பதைக் கண்டான் அறிஞன்

**ம. சூசைமுத்து**
**வன்னிவாழ் இதயம்**

இயற்கையோடு நாம் நல்லுறவை வளர்த்துக்கொள்ள வேண்டுமானால் இயற்கையின் தன்மைகளையும் அவை படைக்கப்பட்டதன் நோக்கம் பற்றியும் நாம் ஆழமாகப் புரிந்து கொள்ளவேண்டும். இப்பிரபஞ்சத்தில் நாம் காணுகின்ற, அனுபவிக்கின்ற படைப்புப் பொருட்கள் யாவும் இறைவனுக்கே சொந்தம். அவரே உயிரினங்களை வடிவமைத்து உணவூட்டிப் பாதுகாத்து வருகிறார். தொடக்கமும் முடிவும் அவரின் திட்டத்தில் தான் தங்கியிருக்கிறது.

இப்பிரபஞ்சத்திற்குரிய மூல காரணங்களாகிய பஞ்சபூதங்களான நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் இவை அனைத்துமே இறைவனுடைய ஆசீர்வாதங்கள். கொடைகள், உறவுகள் பஞ்சபூதங்கள் இல்லையானால் எந்த உயிரினமும் வாழவோ மலரவோ முடியாது.

*"நிலம், நீர், வளி, தீ, விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம் - உலகம் ஆதலின் இரு திணை ஐம்பால் இயல்நெறி வழா அமைத்திரிவு இல்*
*சொல்லோடு தழா அல் வேண்டும்"*

(தொல்காப்பிய மரபியல் பாடல் 91)

பிரபஞ்சக் குடும்பத்தில் இறைவன் தந்தையாகவும், பூமி தாயாகவும், சூரியன் சந்திரன் விண்மீன்கள் சகோதரர் ஆகவும், காற்று நீர் நெருப்பு சகோதரிகள் ஆகவும் ஏனைய உயிரினங்களான விலங்குகள், பறவைகள், கடல்வாழ் உயிரினங்கள், மரம், செடி, கொடி வகைகள், ஊர்வன, பூச்சியினங்கள் சக உறவுகளாகவும் கடைசியாக உருவாக்கம் பெற்ற மனிதனிடமே அனைத்தையும் ஆளும் பொறுப்பு ஒப்படைப்படுகின்றது.

அதேவேளை மனித இனத்தின் பொறுப்பற்ற செயல்களால் பூமியில் உள்ள இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதால் - சுற்றுச் சூழல் பாதிக்கப்பட்டு வருகிறது. முதலாளித்துவம் என்ற மமதையால் கண்மூடித்தனமாக இயற்கையின் செல்வங்கள் சுரண்டப்படுகிறது. பரிசுத்த வேதாகமம் வெளிப்படுத்துவது போல் படைத்த இறைவன் திட்டத்தை உதாசீனம் செய்த காரணத்தால் சிங்காரத் தோப்பில் இருந்து மனிதன் மட்டுமே வெளியேற்றப்படுகிறான். கடவுள் தன்னை குப்பையெனத் தூக்கி வீசியெறிந்து விட்டார் எனத் தவறான சிந்தனையை வளர்த்துக்கொண்டு மனிதன் படைப்புப் பொருட்களைக் குப்பையாக்கிக் கொள்வதன்மூலமாக கடவுள் மேல் தான் வைத்திருக்கும் கோபத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக இயற்கை வளங்களைச் சீரழித்து வருகிறான். நமது உடலானது பூமியின் மூலக்கூறுகளான நிலம், நீர், காற்று இவைகளால் நெய்யப்பட்டுள்ளது. இவற்றை அழித்தால் நம்மை நாம் அழித்துக் கொள்வதற்குச் சமமாகிறது. திருமூலர் சொல்வதுபோல் "அண்டத்தில் இல்லாதது பிண்டத்தில் இல்லை, பிண்டத்தில் இல்லாதது அண்டத்தில் இல்லை..."



**பூமி குப்பைத் தொட்டியாக மாறுகிறது**

ஒதுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு புறந்தள்ளப்பட்ட நிலையில் பூமித்தாய் காட்சி தருகிறாள். கடவுள் மனித இனத்தை நம்பி 25 சதவீத நிலம் மட்டுமே கொடுத்துள்ளார். எஞ்சிய 75 சதவீத நிலத்தை கடல் எனும் போர்வைக்குள் பத்திரமாக மறைத்து வைத்துள்ளார். ஆனால் நவீன மனிதன் கடலுக்குள் இருக்கும் இயற்கை வளங்களைக் கூட விட்டு வைக்கவில்லையே. இதனால் பூமித்தாய் சோகம் ததும்பும் முகாரி இராகத்தில் ஓலமிட்டுக் கொண்டிருக்கிறாள்.

நமது சூரியக் குடும்பத்தில் உள்ள எட்டுக் கோள்களும் மனிதனுடைய கைக்கு அகப்பட்டிருந்தால் ..? நிலமை என்னவாகும். இதைக்குறித்தே இளங்கோ அடிகள் சிலப்பதிகாரக் காப்பியத்தில் முத்தான மூன்று உண்மைகளை

*"அரசியல் பிழைத்தோர்க்கு*
*அறம் கூற்று ஆவதா உம்*
*உரைசால் பத்தினியை*
*உயர்ந்தோர் ஏத்தலும்*
*ஊழ்வினை உருத்து வந்து*
*ஊட்டும் என்பதா உம்"....* எனக் கூறுகிறார்.

நவீன மனிதனுக்கு எதிர்மறையாக 'சங்ககால மக்கள் வாழ்ந்து வந்ததை பரிபாடல் எனும் எட்டுத்தொகை நூலில் இருந்து நாம் வாசித்தறியலாம். ஏறக்குறைய 2300 ஆண்டுகளுக்கு முன்னர் சுற்றுச்சூழலையும், இயற்கை வளங்களையும், ஏனைய உயிரினங்களையும் சங்க கால மக்கள் எவ்வாறு பாதுகாத்து வாழ்ந்தார்கள் என்பதைப் பரிபாடல் விவரித்துள்ளது.

**இயற்கையை நேசித்தல்**

இறைவன் நம்மோடு இருக்கிறார். பிரபஞ்சங்கள் எம்மத்தியில் இருக்கும்போது நாம் அநாதைகள் அல்ல. கைவிடப்பட்டவர்கள் அல்ல. அனைத்திலும் கொடுத்து வைத்தவர்கள் . அதே வேளை எமது கடமைகளைச் சரிவரச் செய்யாவிட்டால் கணக்குக் கொடுக்க வேண்டியவர்களாவோம். இயற்கையை அழிக்கும் போதும், ஏனைய உயிரினங்களை வதைக்கும் போதும் மனித மாண்புக்கு எதிராகக் குற்றம் செய்கின்றோம்.

**பிரபஞ்ச உறவுகளின் விரிவாக்கம்**

மனித இனம் ஏனைய படைபுகளுடன் இணைந்து ஓர் ஆன்மீகத் திருப்பயணத்தை மேற்கொண்டு வருவது உண்மையான யதார்த்தமாகிறது. பூமித்தாய் ஏனைய கோள்கள் யாவும் சகோதரர்கள். தண்ணீர், காற்று ஏனைய உயிரினங்களான விலங்குகள், பறவைகள், ஊர்வன, பூச்சி புழுக்கள், விவசாயியின் தோழன் மண்புழு அனைத்துமே எமது உறவுகள். நாம் தனித்து உரிமைபாராட்ட முடியாது. எனது உடலிற்கு நான் தான் சொந்தக்காரன் எனக் கூறும்போது அம்மா நான் தான் உன்னைப் பெற்றேன். இந்த உடல் எனக்குத் தான் சொந்தம் என உரிமை கோருகிறார். கணவனும் மனைவியும் இரண்டு உயிர் ஓர் உடல் எனக் கருதப்படுகிறது. பூமித்தாய் என்னிடம் இருந்து தான் மனிதன் பிறக்கிறான். இறந்த பின்பும் என்னிடம் தான் வரவேண்டும். நெருப்பு, மனித உடலிற்கான சீதோஷ்ணத்தை நானே கவனித்துக் கொள்கிறேன். மனிதன் இறந்த பின்பு உடலை எரிப்பது நானேதான். காற்று, தண்ணீர் நாங்கள் இல்லாவிட்டால் மனிதன் எப்படி உடல் நலமாக வாழமுடியும். மனித உடலில் உள்ள பூச்சிபுழுக்கள் தாங்கள் தலைமுறை வழியாக இங்கு தான் குடித்தனம் நடாத்தி வருகிறோம், அது எமது பூர்வீக சொத்து. இவற்றினறுற் மூலம் ஆழமான உண்மைகள் எமக்கு உணர்த்தப்படுகிறது.

**இயற்கை வளமும் எமது கடமைகளும்**

சுற்றுச்சூழல், இயற்கை வளம் அனைவருக்கும் பொதுச்சொத்து. எமது நலனுக்காகவே அவை இறைவனால் படைக்கப்பட்டன. *இயற்கையை ஆசிப்போம் வழிநடத்தும் இறைவனை தினம் பூசிப்போம்...*

## 27 ம் ஆண்டு நீங்கா நினைவில்....



பிறப்பு 04 - 07 - 1976

இறப்பு 31 - 07 - 1991

ஆனையூரின் அன்பனாய்
ஆழியில் அவதரித்து
ஆனையிறவில் ஆகுதியான
விண்தொட்ட வீரனே
மண்தொட்ட நின் அன்மா
மண்ணிலும் மனங்களிலும்
காலம் எல்லாம்
கனிந்திருக்கும்...

**யாக்கோப்பு அல்டீன்ஜோர்ஜ் (அன்பு)**

AD/65

குடும்பத்தினர்
உயரப்புலம், ஆனைக்கோட்டை

---

விண்ணக வாழ்வின்

## உம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14 • 04 • 1985

மறைவு 19 • 08 • 2016

fr.R

அமரர்

**செல்வன். றெஜிஸ் செல்வநாதன் மெறில் கிளின்ரன்**

" ஆண்டவரின் இல்லத்தில் நான் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்"
(தி.பா 23 : 6)

ஈழவிழிகள் இன்னும் காயவில்லை
இதயத்தின் வேதனைகள் இன்னும் குறையவில்லை
இறைவனடி இணைந்து ஈராண்டுகள் நிறைந்ததையா
உமது நினைவுகள் எம்மில் வேரூன்றி உள்ளது.
ஈராயிரம் வருடங்கள் ஆனாலும் உம்
நினைவாய் வாழ்ந்து உமது ஆன்மா அமைதிபெற வேண்டுகின்றோம்.

118/1கடற்கரைத்தெரு
நீர் கொழும்பு
031-222 5327
0779929511

அவரின் பிரிவால் துயருறும்
அன்புத் தந்தை தாய், சகோதரன்
மைத்துனி உற்றார் உறவினர்
நண்பர்கள்.

---

## 31ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 02 - 01 - 1949

இறப்பு 06 - 07 - 2018

அமரர்

**யேசுராஜா செபமாலையம்மா (ராசாத்தி)**

" இதோ உன்னை பெயரிட்டு நாமே
அழைத்தோம் ஆகவே நீ எனக்கே சொந்தம் "
(எசாயா 43 :1)

கலகலத்த உன் பேச்சு கானல் நீரானதுவோ
கனிவான உன் வதனம் நீராகி போனதுவோ
அருகிருந்து எமை அரவணைக்க இங்கு
அருமையான எம் அம்மா இல்லை இன்று
பெருமையாய் உன் நிழலில் வாழ்ந்த காலம்
வெறுமையாய் போனதுவே கண்ணில் நீர்
சொரிந்து கலங்குகின்றோம் உம் ஆன்மா
இறைபதத்தில் வாழ அனுதினமும்
நாம் வேண்டுகின்றோம்.

AD/63

4ம் குறுக்குத்தெரு
பருத்தித்துறை - 0776211826

என்றும் உங்கள்
அழியா நினைவுகளுடன்
யேசுராசா குடும்பத்தினர்

---

## 2ம் ஆண்டு பிரிவின் நிறைவில்



பிறப்பு 16 - 04 - 1955

இறப்பு 12 - 08 - 2016

அமரர்

**திருமதி. கிறிஸ்ரின் தர்மசீலன்**

ஆசிரியையாய் பலர்க்கு அறிவொளி தந்தவளே
அன்புத் துணைவனை அருகிருந்து பார்த்தவளே
உற்றார் உறவினர்க்கு உறுதுணையானவளே
சுற்றம் சொந்தம் எல்லாம் சுற்றிநின்று புலம்பி அழ
பற்றும் பாசமும் மறந்து ஏன் பறந்துவிட்டாய்
அம்மா என்றலறும் மகளை ஏன் மறந்தாய்
பேரக்குழந்தைகளின் கதறல் கேட்கிறதா?
நோயுற்றோருக்கெல்லாம் தாதியாய் இருந்தவளே
கொடு நோயின் பிடிக்குள்ளே அகப்பட்டதேன்
கிறிஸ்ரின் என்பதால் கிறிஸ்துவோடு இணைந்தாயோ
நினைப்போம் திடுக்கிடுவோம்
நினைவு வரும் வேளைகளில்.......

336/232 பேஸ் லைன் வீதி
கட்டுவ, நீர்கொழும்பு

பிரிவால் துயருறும்:
கணவன், மகள்,
மருமகன் பேரப்பிள்ளைகள்,
உற்றார் உறவினர்

---

## இளையோருக்கு மடல்....

அன்பு நண்பா! நலம் பல நாடலும் இறை யாசீரும் நிறைந்த வாழ்த்துக்கள். உனது உள்ளம் நிறைந்த நினைவுகளை உன் மடலில் கண்டேன். இளமையில் அடக்கப்பட்ட உள்ளுணர்வுகளை வெளிப் படுத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டாய். பலருக்கு ஏதோ சொல்லவேண்டுமென்ற ஆவல் இருந்தாலும் சந்தர்ப்பங்களை சாதகமாக்கிக் கொள் ளாததால் தான் மன விரக்தியுற்று அடக்கப்பட்ட உணர்வுகளை வன்முறையில் வெளிப்படுத்து கிறார்கள் அல்லது மௌனத்தால் ஒதுங்கி வாழ்கிறார் கள். இதில் உன் முயற்சி எந்தநிலையிலும் எமது நாட்டில் பாராட்டத்தக்கது.

எந்த நிலையிலும் எமது நாட்டில் ஆன்மீக பற்றுறுதி குறையவில்லை என்பதற்கு உங்கள் ஊர் ஆலயத் திருவிழா. விசேட திருநாட்களில் கலந்து கொள்ள மேற்கொண்ட ஆர்வமே சாட்சி சொல்லும். எல்லோரும் ஒன்றுகூடி மகிழ்ந்து கொண்டாடுவது தானே ஆலயத் திருவிழா. கொண்டாட்டம். எமது வாழ்விலும் புது மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். வெறும் சடங்குகளாக. கேளிக்கைகளாக மாறிவிடாது பார்த்துக் கொள்வதும் இளையோரின் கடமை. இம்முறை மடு யாத்திரைக்கு ஊரில் உள்ள எல் லோரும் செல்லவிருப்பதாக கூறியிருந்தாய் மகிழ்ச்சி. யாத்திரை என்பது வெறும் சுற்றுலாவாக மாறி வரு வதையும். பொழுதுபோக்கு வேண்டி மோதலாக மாறிவருவதையும் காண முடிகின்றது. இதனை யும் இளையோர்களே மாற்றி அமைக்கவேண் டும் என்று வேண்டி உன் செயற்பாடுகளை எதிர் பார்த்து மடலை நிறைவு செய்கிறேன். **அன்புடன்**

**செ.யோசப்பாலா**
**உளச் சமூக சீராளன்**

---

## மரண தண்டனை....

(05ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு சமூகத்தின் மிகப் பெரும் சாபக்கேடு, சட்டத்தை ஏற்படுத்துவோரே அச்சட்டத்தை மீறுவதுதான் (Law maker becomes the law breaker). இதை இன்னுமொரு வகையில் வேலி பயிரை மேய்வது என்றும் கூறலாம். சுருங்கக் கூறின், உறுதியான அரசியல் (Steady Politics) நாட்டில் அமையாது விட்டால் குற்றங்கள் அதிகரித்துக் கொண்டு செல்லும் என்பதே உண்மை.

### முடிவுரை

குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும். ஆனால் தண்டனைகள் ஒரு மருத்துவக் குணம் கொண்டவையாக. குற்றவாளியையும் சமூகத்தையும் சீர்ப்படுத்துவனவாக அமைய வேண்டும். மரணம் - ஓர் தண்டனையா என்பதை ஓர் விளைவாகவே உங்கள் சிந்தனைக்கு விட்டு விடுகிறேன். குற்றங்கள் அதிகரிப்பதற்கு காரணம் என்ன, நீங்களும் நானும் ஒரு வகை யில் நேரடியாகவோ, மறைமுகமாக-வோ காரணமாக இருக்கின்றோமா? சிறையில் இருக்கும் ஐந்து போதைப்பொருள் முகவர்களுக்கு மரண தண்டனை கொடுத்துவிட்டால் நாட்டில் போதைப்பொருள் பாவனை முற்றாக ஒழிந்து விடுமா? இந்த விடயத்தை இவற்றுக்குப் பொறுப்பான அதிகாரிகள் முதலில் உறுதி செய்ய வேண்டும். சிறைக்குள் இருப்பவர்கள் எவ்வாறு போதைப் பொருள் பாவனையில் ஈடபட்டார்கள்? அப்படியானால் சிறைக் கண்காணிப்பாளர்கள் தங்கள்

பணியை சரியாகச் செய்யவில்லை என்பதுதானே அர்த்தம். சிறைச்சாலையின் கட்டுப்பாடு போதைப் பொருள் முகவர்களின் கையில் இருக்குமாயின் அதன் அர்த்தம் என்ன?

எய்தவர்களை விட்டு விட்டு நாம் அம்பை நொந்து கொள்ளும் சந்தர்ப்பங்கள் எம் நாட்டில் அதிகமாகவே இருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. மீண்டும் கூறுகிறேன் குற்ற வாளிகள் தண்டிக்கப்படவேண்டும். அதேவேளை குற்றங்களுக்கான ஆணிவேர்களும் கண்டறியப்பட வேண்டும். சட்டங்களையும் ஒழுங்குகளையும் அமுல்படுத்தும் பெறுப்பில் இருக்கும் அரசு அவற்றை நாட்டில் அமுல்படுத்தும்போது நீதியை நிலைநாட்டுவதில் கவனம் செலுத்தவேண்டும். சிறைச்சாலைகள் சீர்த்திருத்தப் பள்ளிகளாக அமைய வேண்டும். அங்கே சீர்கேடுகளுக்கு அனுமதி வழங்கப்படக்கூடாது.

மரணதண்டனை பற்றி திருஅவையின் திருப்பீடம் இம்மாதம் 02ம் திகதி வெளியிட்டுள்ள புதிய போதனையை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

**" மரணதண்டனை குறித்த புதிய மறைக்கல்வி கருத்து
தீவிரமான குற்றங்களை ஒருவர் செய்திருந்தாலும், அவரது மனித மாண்பு, அக்குற்றங்களால் எவ்வகையிலும் குறைவதில்லை என்றும் தீவிரக் குற்றங்கள் புரிவோரை மக்களிடமிருந்து பிரித்துகாவலில் வைப்பதில், தகுந்த வழி முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன என்றும், காவலில் வைக்கப்பட்டிருப்போர், மனம் திருந்தும் வாய்ப்புக்கள் உண்டு என்றும், மறைக்கல்வி 2267 என்ற பிரிவில் புதிதான எண்ணங்கள் கூறப்பட்டுள்ளன.
மரண தண்டனையை அறவே ஒழிப்பதில் திருஅவை இந்த எண்ணங்களின் அடிப்படையில்,மனிதமாண்புஎந்தச் சூழலிலும் சிதைக்கப்படக் கூடாதுஎன்பதில் திருஅவைஉறுதியாகஉள்ளதுஎன்று ம்,மரணதண்டனை இந்த மாண்பைக் குலைப்பதால், அதனை உலகெங்கும் ஒழிப்பதற்கு திருஅவை முயற்சிகள் மேற்கொள்ளும் என்றும், இந்த புதிய திருத்தங்களில் கூறப்பட்டுள்ளன.
இந்த மாற்றங்கள் அடங்கிய மறைக்கல்வி 2267ம் எண்ணை, இவ்வியாழனன்று, திருப்பீட விசுவாசக் கோட்பாட்டு பேராயம் வெளியிட்டுள்ளது"**

---

# விடுமுறைக் கால விவிலியப் பாடசாலை

**அருட்பணி. பரிங்ரன் லீனஸ் (CMF)**

இறைவார்த்தை என்பது எமக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட விலைமதிக்க முடியாத ஓர் சொத்து. கிறிஸ்துவைப் பின் பற்றுவோர் எப்படியும் வாழலாம் என்றல் லாது இப்படித்தான் வாழவேண்டும் என வழி காட்டும் கலங்கரை விளக்கு. இக்கலங் கரை விளக்கின் ஒளியிலே நேர் வழியிலே வாழ்ந்தோர் பலர் இன்று எம்மத்தியிலே அருளாளர்களாக, புனிதர்களாக, மறைசாட் சிகளாக வணக்கம் செலுத்தப்படுகின்றனர்.

எமது நாட்டிலே அர்ப்பணிப்புடன் பணி யாற்றுகின்ற அமலமரியின் மறைபோதக மைந்தர்கள் சபையின் (கிளரீசிய சபை) ஸ்தாபகர் தூய அந்தோனி மரிய கிளாரட் டின் (1807- 1870) வாழ்வானது இறை வார்த்தையினால் முற்றுமுழுதாக ஆட் கொள்ளப்பட்டதாகவும், அதை எப்படி வாழ் வது, தனக்கு வாழ்வளித்த வார்த்தையி னால் பிறருக்கு எவ்வாறு வாழ்வளிப்பது என்பது நோக்கமாகவும் இருந்தது.

1926ம் ஆண்டு திருத்தந்தை பதினொராம் பத்திநாதர், அந்தோனி மரிய கிளாரட்டின் உயர்ந்த புனித செயல்களைக் குறித்து அறிக்கையிட்டபோது, "இவர் உண் மையிலேயே நவீன காலத்து திருத்தூ தராக வாழ்ந்தவர். இந்த திருத்தூதர் என்பது அவருக்குரிய பட்டமும் மகிமையும் பாராட்டுதற்குரிய சிறப்பும் ஆகும். நற்செய்தி அறிவிப்பு, பிறரன்புப்பணி, சமூகத்தொடர்பு ஊடகங்களை மறைபணிக்காய் பயன் படுத்தி புதிய உயிரூட்டமும் அறிவாற்றலும் நிறைந்த பணிகளுடன் மக்கள் நலன் நாடிய நூல்கள், எல்லா இடங்களையும் நிரப்பும் துண்டுப்பிரசுரங்கள் போன்றவற்றை சிறப் பாக பயன்படுத்தியவர். இன்றைய மேய்பர் களுக்கும் நற்செய்தி அறிவிப்பாளர்களுக் கும் திருச்சபையின் மகிமைக்காக உழைப் பதற்குரிய தூண்டுதலின் எடுத்துக்காட்டாய் தூய அந்தோனி மரிய கிளாரட் விளங்கு கிறார்." என்று கூறி பெருமைப்படுத்தி னார்.

இவ்வாறு இறைவார்த்தைக்கு உருக்கொடுத்து வாழ்ந்த புனித கிளாரட் டின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி உலகெங் கிலும் கிளரீசிய சபையினர் இறைவார்த் தைப் பணியினை முன்னெடுப்பதில் மும் முரமமாக செயற்பட்டு வருகின்றனர். அந்த வகையில் விடுமுறைக்கால விவிலியப் பாடசாலை என்னும் மறையறிவுப் பகிர்வு பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு கிளரேசியன் சபையினரால் பதுளை மறை மாவட்டத்தில் முதன்முதலாக அறிமுகப் படுத்தப்பட்டு நடைபெற்றது. கிளரேசியன் சபையினர் நாட்டின் ஏனைய பாகங்களிலும் இப்பாடசாலையை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

# மடுக்கோவில் பிரதேசத்தை புனித பூமியாக பிரகடனப்படுத்த அபிவிருத்தித் திட்டங்கள்

**- ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன**



மடுக்கோவில் பிரதேசத்தை புனித பூமியாகப் பிரகடனப்படுத்துவதும், அப்பிரதேசத்தை அண்மித்ததாக போக்குவரத்து வசதிகள் மற்றும் வீதி வசதிகள் போன்றவற்றை மேம்படுத்துவதும் நீர்வள கட்டமைப்பு, வெளிப்பிரதேசங்களிலிருந்து வருகை தருவோருக்கான தங்குமிட வசதிகள், ஓய்வு மண்டபங்கள் போன்ற வசதிகளை உள்ளடக்கி மடுக்கோயில் பிரதேசத்தை விசேடமாக அபிவிருத்தி செய்யும் கருத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க இருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மருத மடுத் திருத்தலத்திற்கு ஜனாதிபதி அவர்களும், அவரது குடும்பத்தினரும், பேராயர் அதிமேதகு மல்கம் கருதினால் ரஞ்சித் ஆண்டகையுடன் சென்று மடு மாதாவிற்கு வணக்கம் செலுத்தினர்.

மடுக்கோவிலை அண்மித்த பிரதேசத்தை புனித பூமியாக வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் பிரகடனப்படுத்துவதற்கும் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டு மேம்படுத்துவதற்கும் சிபார்சு செய்வதாக ஜனாதிபதி இவ்விஜயத்தின் போது தெரிவித்தார்.

# வண்ணக்கோலங்கள் கலை நிகழ்வு

யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத்தினால் நடத்தப்பெறுகின்ற உடுவில் ஆர்க் மாற்று ஆற்றலுடைய பிள்ளைகளின் மேற்படிக் கலை நிகழ்வானது திருமறைக் கலாமன்றத்தினதும், சுமேரா நிறுவனத்தினதும் இணைந்த ஏற்பாட்டில் 01.08.2018 மாலை திருமறைக்கலா மன்ற கலைத்துாது கலையகமண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு யாழ் மாநகர சபை முதல்வர் கௌரவ இ.ஆனோல்ட் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக யாழ். திருக்குடும்ப கன்னியர் சபை மாகாணத் தலைவி அருட்சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ் அவர்கள் கலந்துகொண்டார். நன்றி உரையினை திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகள் நிகழ்த்தினார். யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர் செல்வி அல்பிரட் அவர்கள் நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார். நிகழ்வில் மாற்று ஆற்றலுடைய பிள்ளைகளின் பல்வேறு நடனம், இசை, நாடகம் போன்ற கலைநிகழ்வுகள் நடைபெற்றன.

திருமறைக்கலாமன்றம் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக சுமேரா நிறுவனத்துடன் இணைந்து மாற்று ஆற்றலுடைய பிள்ளைகளுக்கான பயிற்சி வகுப்புக்களை நடத்துவதுடன் வருடந்தோறும் இவ்வாறான கலை நிகழ்வுகளையும் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

திருக்குடும்ப கன்னியர் மடத்தின் "ஆர்க் நிறுவனம்" மாற்று ஆற்றலுடைய சிறார்களை பராமரிக்கின்ற பாரிய அர்ப்பணிப்புடைய சேவையை பல ஆண்டுகளாக மேற்கொண்டு வருவதனை யாவரும் அறிவர். அச்சிறார்களின் ஆக்கத்திற்கு களங்கொடுத்த சிறப்பான நிகழ்வாக இது அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் சுமேரா நிறுவனத்தின் இயக்குனர் சுமேத்திரா பண்டார நாயக்கா அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# மரணதண்டனை குறித்த மறைக்கல்வியில் மாற்றங்கள்

மரண தண்டனை மனித மாண்பைக் குலைப்பதால் அதனை உலகெங்கும் ஒழிப்பதற்கு திருஅவை முயற்சிகள் மேற்கொள்ளும். மறைக்கல்வி 2267 பிரிவில் கூறப்பட்டுள்ள புதிய திருத்தங்கள் மரண தண்டனை குறித்து கத்தோலிக்க மறைக்கல்வி, 2267 என்ற பிரிவில் இதுவரை கூறப்பட்டு வந்த கருத்துக்களில் மாற்றங்களை உருவாக்கி, திருப்பீட விசுவாசக் கோட்பாட்டு பேராயம் மாற்றப்பட்ட புதிய கருத்துக்களை ஆகஸ்ட் 2 ஆம் திகதி வெளியிட்டுள்ளது.

திருப்பீட விசுவாசக் கோட்பாட்டு பேராயத்தின் தலைவர் கர்தினால் Luis Francisco Ladaria அவர்கள் இவ்வாண்டு மேமாதம் 11ம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைச் சந்தித்த வேளையில் இந்த மாற்றங்கள் அடங்கிய வரைபை அவருக்கு அளித்து, அவரது ஒப்புதலைப் பெற்றுள்ளதாக ஆயர்களுக்கு எழுதிய மடலில் குறிப்பிட்டுள்ளார்.

**மரண தண்டனை குறித்த பழைய மறைக்கல்வி கருத்து**

நீதியான முறையில் அமைக்கப்பட்ட அதிகாரிகள், நேர்மையான வழக்கைநடத்தி, அதன் இறுதியில் வழங்கிய மரண தண்டனை ஒருவர் செய்தமிகக் கொடிய குற்றத்திற்கு தகுதியான தண்டனை என்று மறைக்கல்வி 2267 எண் இதுவரை கூறி வந்தது.

**மரண தண்டனை குறித்த புதிய மறைக்கல்வி கருத்து**

தீவிரமான குற்றங்களை ஒருவர் செய்திருந்தாலும், அவரது மனித மாண்பு, அக்குற்றங்களால் எவ்வகையிலும் குறைவதில்லை என்றும் தீவிரக் குற்றங்கள் புரிவோரை மக்களிடமிருந்து பிரித்து காவலில் வைப்பதில், தகுந்த வழிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன என்றும், காவலில் வைக்கப்பட்டிருப்போர் மனம் திருந்தும் வாய்ப்புக்கள் உண்டு என்றும் மறைக்கல்வி 2267 என்ற பிரிவில் புதிதான எண்ணங்கள் கூறப்பட்டுள்ளன.

**மரண தண்டனையை அறவே ஒழிப்பதில் திருஅவை**

இந்த எண்ணங்களின் அடிப்படையில் மனித மாண்பு எந்தச் சூழலிலும் சிதைக்கப்படக் கூடாது என்பதில் திருஅவைஉறுதியாக உள்ளது என்றும் மரணதண்டனை இந்த மாண்பைக் குலைப்பதால், அதனை உலகெங்கும் ஒழிப்பதற்கு திருஅவை முயற்சிகள் மேற்கொள்ளும் என்றும் இந்த புதிய திருத்தங்களில் கூறப்பட்டுள்ளன.

இந்த மாற்றங்கள் அடங்கிய மறைக்கல்வி 2267ம் எண்ணை, திருப்பீட விசுவாசக் கோட்பாட்டு பேரா யம் வெளியிட்டுள்ளது

## கத்தோலிக்க கூத்து......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பல்வேறு தளங்களில் அரும்பணியாற்றியுள்ளார் எனவும் குறிப்பாக நாடகத்துறையில் நடிகராக, நாடக ஆசிரியராக நெறியாளராக, அரங்க ஆய்வாளராக பெறுமதிமிக்க பணிகளை ஆற்றினார். அவர் மேற்கொண்ட ஆய்வுப்பணிகள் மிகவும் பெறுமதி மிக்கவையாகத் திகழ்கின்றன.

அவர் எழுதிய ஈழத்து இசைநாடக வரலாறு, நடிகமணி வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும், வட இலங்கை நாட்டார் அரங்கு, சிங்கள பாரம்பரிய அரங்கு, மலையகக் கூத்துக்கள் ஆகிய ஆய்வு நூல்கள் அந்த வகையில் குறிப்பிடப்பட வேண்டியவையாக காணப்படுகின்றன.

குறிப்பாக கத்தோலிக்க கூத்துமரபில் ஆடல்களை மீள் கண்டு பிடிப்பு செய்வேண்டுமென்பதற்கு ஊக்கம் கொடுத்தவர் வடஇலங்கை நாட்டார் அரங்கு என்ற அவரது ஆய்வுநூலில் யாழ்ப்பாண மன்னார் கத்தோலிக்க கூத்துக்கள் பற்றி ஆழமான பல விடயங்களை ஆய்வு செய்துள்ளார்.

திருமறைக் கலாமன்றத்தின் நிகழ்வுகளுக்கு எப்போதும் ஊக்கம் கொடுத்து வந்துள்ளார். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி நடத்திய தனிநாயகம் அடிகள் நினைவுப் பேருரையில் 1999ஆம் ஆண்டு கத்தோலிக்க அரங்க 'மரபு' என்ற ஆய்வுப் பேருரையானது மிகவும் பெறுமதிவாய்ந்த ஆய்வாக காணப்படுகின்றது." எனவும் கூறினார்.

மேற்படி நிகழ்வானது பேராசிரியர் எஸ் சிவலிங்கராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் வரவேற்புரையினை ஓய்வுநிலை உதவிக் கல்விப்பணிப்பார் அநாதரட்சகன் நிகழ்த்தினார். ஆசி உரையினை புனித வளன் கத்தோலிக்க அச்சக பணிப்பாளர் அருட்பணி எயின்சிலி றொஷான் அடிகள் நிகழ்த்தினார்.

வாழ்த்துரையினை யாழ் மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் அவர்களும் 'தவம்' என்ற அமரரின் மீள்பதிப்பு கவிதை நூலுக்கான ஆய்வுரையை கவிஞர் சோ. பத்மநாதன் அவர்களும், முதல் பிரதியைப் பெற்றதுடன் சிறப்புரையை வாழ்நாட் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களும் நிகழ்த்தினார்.

அமரர் கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை அவர்கள் 2005 ஆம் ஆண்டு லண்டனில் காலமானார் என்பதுடன் அவரது இறப்பிற்குப்பின்பு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அவரது முதல் நினைவேந்தல் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வானது அமரர் காரை சுந்தம்பிள்ளை அவர்களின் குடும்பத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## ஆன்மீகப் பணி.......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, ஆன்மீகப் பணிகளை மேற்கொள்பவர்கள் அருகி வருவதாகவும் அத்தகைய ஆன்மீகப் பணிகளை மேற்கொள்பவர்களைத் தான் இன்று எமது சமுதாயம் எதிர்பார்த்து நிற்பதாகவும், அத்தகைய ஆன்மீகப் பணியை முன்னெடுக்கும் சங்கமம் ஆன்மீக மையம் சிறப்பான பணிகளை மேற்கொள்ள தாம் ஆசிப்பதாகவும் கூறினார்.

யாழ் அமலமரித்தியாகிகள் சபையின் வடமாகாண முதல்வர் அருட்பணி எட்வின் வசந்தராஜா அமதி அடிகள், இயேசுக் கிறிஸ்துவின் திருவுருவப்படத்தை திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வுகளை சங்கமம் ஆன்மீக மையத்தின் அதிபர் அருட்பணி D.E.ரட்ணராஜா அமதி அடிகள் மற்றும் அருட்பணி S.றெஜினோல்ட் அமதி அடிகள் இணைந்து மேற்கொண்டிருந்தனர்.

நற்கருணை நாதர் ஆச்சிரமம் எனப் பெயரிடப்பட்டுள்ள சங்கமம் ஆன்மீக மையத்தில் அமைக்கப்பட்டுள்ள 100 அடி நீளமான ஆராதனா மண்டபம் உள்நாட்டு மக்களதும் புலம்பெயர் வாழ்மக்களதும்நிதிஅன்பளிப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

சங்கமம் நற்கருணை நாதர் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகள் தோறும் நற்கருணை வழிபாடும், குணமாக்கல் வழிபாடும் இடம்பெற்று வருகின்றது. உள்நாடுகளிலும் வெளிநாடுகளிலும் இருந்து வரும் மக்கள் இவற்றில் கலந்துகொண்டு ஆன்மீக ரீதியில் பெரும் பயன்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## புனிதர் நிலைக்கு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அகிம்சைப் போர் தொடுத்து நின்றதாலும் கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தை பிரசாரம் செய்ததன் விளைவாகவும் கொல்லப்பட்டார்.

மறைசாட்சியான இவருக்கு முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிற் அவர்களால் முக்திப்பேறு பட்டம் வழங்கப்பட்ட நிலையில் தற்போது புனிதர் நிலைக்கு உயர்த்தப்படுகின்றார்.தேவசகாயம்பிள்ளை பொது நிலையினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## துயர் பகிர்கின்றோம்

அருட்பணி ஸ்ரீபன் சிங்கராயர் CMF அடிகளாரின் அன்புத் தாயார் **றோசம்மா சிங்கராயர்** கடந்த 26.07.2018 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் ஆனமா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன், அன்னாரின் குடும்பத்தினருடன் துயர் பகிர்ந்து நிற்கின்றோம்.

*- பாதுகாவலன் குடும்பம்*

இப் பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2018 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.